அறைவு 02 இயம் 27 February 15 - 21, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
# மலைமுரசு
MALAIMURASU
விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

கிழக்கிற்கோர் இழப்பு



பாலு மகேந்திரா

# கோணேசர் பூமியிலும் கொலைப் புதைகுழி???

திருக்கோணேஸ்வரர் முன்றலிலும் மனிதப் புதைகுழியொன்று இருக்கலாம் எனும் சந்தேகம் எழுந்துள்ளது.

சர்வதேசத் தரத்திலான துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைக்கும் பணிகள் மக்.ஹெய்சர் விளையாட்டு அரங்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கான கட்டுமானப் பணிகளுக்காக கிடங்குகளைத் தோண்ட முற்பட்ட போது வெளிவந்துள்ள இரண்டு மனிதக் கூடுகளை அடுத்தே இச் சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த 12ம் திகதி இரவு 10 மணியளவில் வெளிவந்த இம் மனிதக் கூடுகளை அடுத்து இரவோடிரவாக அக் கிடங்குகளை மூடிவிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் என்னும் அது கைகூடவில்லை என்றும் தகவல் அதற்குள் வெளியாகி விட்டது என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக சிரேட்ட ஊடக வியலாளர் ஒருவர் தனது பேஸ்புக்கில் இட்ட

13





## வேதனத்திற்காகப் போராடும் வாழைச்சேனை ஊழியர்கள்

### "ஏழைகளின் இரத்தம் உறிஞ்சும் அதிகாரியே வெளியேறு"



"இரண்டு மாதங்களுக்கு மேல் சம்பளம் வழங்கப்படாத நிலையில் நாளாந்த வாழவ்வைக் கொண்டு நடாத்த நாம் மிகவும் இடர்களை எதிர்கொள்கின்றோம். எனவே சம்பளத்தை வழங்கவும் ஏனைய கொடுப்பனவுகளைச் சட்டப்படி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என வாழைச்சேனை காகிகத ஆலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அவர்கள் போராட்டமொன்றை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

13

## விற்றவர் பெட்டியை மாற்றினார் வாங்கியவர் கொள்ளைக்காரனானார்




கைத்தொலைபேசியொன்றின் பெட்டியை விற்பனையாளர் மாற்றி விற்றதால் கொள்வனவு செய்தவர் களவாணியாகச் சந்தேகிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நடந்தேறியுள்ளது.

திருகோணமலை மின்சார நிலைய வீதியில் உள்ள பிரபல்யமான கைத்தொலைபேசி விற்பனைக்கடையில்.......

13

## அரசின் அங்கத்தவர்க்கு எதிராகச் சர்வதேசத் தடைக்கு முயற்சி

பயணத் தடை உட்பட பொருளாதாரச் சொத்துக்களையும் முடக்கும் வேண்டுகோள் ஒன்று தொடர்பாகப் பலம் மிக்க பிரித்தானியப் புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் பிரித்தானிய அரச உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவினால் ஜெனீவா மனித உரிமைக் கூட்டத்தொடரில்.....

13

## 1000 பக்கங்களைத் தாங்கிய ஈழத்தின் முதலாவது ஆலய நூல்

(ஜீவன்)



### "திருக்கோணேஸ்வரம்" வெளியிடப்பட்டது

திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றைச் சொல்லும் "திருக்கோணேஸ்வரம்" என்னும் நூலொன்று கடந்த 9ம் திகதி திருகோணமலையில் வெளியிடப்பட்டுள்ளது.

1000 பக்கங்களில் விரிவடையும் இந்நூல் ஆலயம் சார்ந்த தோத்திரங்கள், புராணங்கள், வரலாறு, வரலாற்று ஆய்வுகள், புனருத்தாரணம், நிர்வாகம், பத்திரிகைச் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், நிழற்படங்கள் என பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பாகும்.

இந்நிகழ்வில் திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபைத் தலைவர். திரு. பரஞ்சோதி அவர்கள் வரவேற்புரையை வழங்க கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைச் செயலாளர் திரு. க. அருள் சுப்பிரமணியம் அவர்கள் 'நூல் அறிமுகவுரையை" ஆற்றினார். இதனைத் தொடர்ந்து நூல் வெளியீடு திருகோணமலை உயர்நீதி மன்ற நீதிபதி.....

13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

MALAIMURASU



இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com
075-4252042


## தேசியக் கூட்டமைப்பின் முன்னுள்ள தேசியப் பணி

ஐகிய நாடுகள் சபையின் பங்குனி மாத மனித உரிமை அமர்வில் உலகநாடுகள் எல்லாம் இருபக்கம் சேர்ந்து கொண்டு பகடையாடத் தீர்மானித்து விட்டன.

உருட்டப்படப்போவது தமிழர்களின் தலைகள் தான். வெட்டப்படப்போவது யார்? என்பதில் ஏட்டிக்குப் போட்டியாக இரு தரப்பின் அனுதாபிகளும் தமது தரப்பு வெட்டப்படப் போவதில்லை எனக் கூறிக்கொண்டு இருக்கின்றன.

இவற்றைப்பற்றி ஒரு புறம் சிந்தித்தாலும் மறுபுறம் இவ்வமர்வை வைத்து தனது அரசியல் சதுரங்கத்தில் மேலும் இரு மாகாணசபைகளின் வெற்றியை அரசு குறிவைத்துள்ளது. இன மேலாதிக்கம், நாட்டுடமை, தேசப்பற்று அன்னிய ஆதிக்கம் என அனைத்து வகையான உணர்ச்சிகர வார்த்தை வடிவங்களையும் அகத்தே கொண்டு அரசு ஜநாவின் மனித உரிமை அமர்வினை தனது வெற்றி அரசியலுக்குப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது.

அத்துடன் மண்டியிட மாட்டோம், காட்டிக் கொடுக்க மாட்டோம், இறைமையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்ற வாதங்களும் மேலோங்கி வரும் போது எழுந்து நிற்கும் உணர்ச்சி வசத்தால் வாக்குகளைத் தனது பெட்டிக்குள் அரசு நிரப்பிவிடும்.

சரி அரசு தனது அரசியல் வெற்றிங்கு ஐ.நாவின் மனித உரிமைச் சபை அமர்வைப் பலியாக்கிவிட்டுள்ள நிலையில் மற்றைய தரப்பான தமிழர் தேசியக் கூட்டமைப்பு அம் மனித உரிமை அமர்வு தொடர்பாகத் காத்திரமான நடவடிக்கைகளை இன்னமும் முன்னெடுக்கவில்லை போலத்தான் தெரிகின்றது.

அதாவது மனித உரிமைச் சபையில் முன்னெடுக்கப்படும் தீர்மானத்தில் பின்னர் தமழர் வாழ்வில் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதை தமிழத் தேசியக் கூட்டமைப்பு முன்னுணர்ந்து அதற்கேற்ற பொது வியூகமொன்றை அமைத்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்கப் பிரேரணை வெல்லும் பட்சத்தில் உள்நாட்டில் மேலும் இன முரண்பாடுகள் சிக்கலான நிலையொன்றுக்கு முன்தள்ளப் படலாம். அதனை ஆகுதியாக்கி அரசியல்வாதிகள் துவேச யாகத்தை மேலும் கொழுந்துவிட்டெரியச் செய்து தமது வாழ்வைச் சிறப்பித்துக் கொள்வர்.

மாறாக அமெரிக்கப் பிரேரணை தோல்வியடையும் பட்சத்தில் சர்வதேச ஆதரவைப் பெருக்கிக்கொள்ளும் இலங்கை அரசு தற்போது முன்னெடுத்துள்ள மிகக் குறைவான நல்லிணக்க, பொருளாதார நடவடிக்கைகளைக் கூட வடக்குக் கிழக்கில் நிறுத்தி விடும் அபாயம் உள்ளது.

அத்துடன் தமிழர் தரப்புடன் பேரம் பேசும் சக்தி அப்போது அரசிற்கு அதிகரித்து விடுவதுடன் "இதைத்தான் தரலாம்... ஏற்றுக்கொள்ள இயலாதா? மன்னர் போலவே சர்வதேசத்திடம் கேளுங்கள்" என்ற பதிலை மறைமுகமாகச் சொல்லிவிடும் வாய்ப்பையும் தீர்மானத் தோல்வி ஏற்படுத்திவிடும்.

எனவேதான் அமெரிக்கப் பிரேரணையின் வெற்றியோ தோல்வியோ அதனை எவ்வாறு தமிழத் தேசத்தில் நலனுக்கானதொன்றாக மாற்றிக் கொள்ளலாம் என்பது பற்றிய ஆய்வில் அரசியல் முதிர்ச்சி உடைய மனிதர்களுடன் கலந்தாய வேண்டிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது.

நடகட்டும்... நடந்த பின் பார்த்துக் கொள்வோம் என்ற சிந்தனையில் இப்போது வாழாவிருப்பது எப்போதுமே இனிக் கைகொடுக்கப் போவதில்லை என்பது தான் உண்மை... சிந்திப்பார்களா???

## திருகோணமலையில் கல்வியியல் கல்லூரி

திருகோணமலையில் கல்வியல் கல்லூரியொன்றை அமைக்க கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத், உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதற்குக்கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய படங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இக்குறைபாட்டைப் போக்கும் வகையிலேயே இந்த கல்வியல் கல்லூரி நிர்மாணிக்கப்படவுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 121 பாடசாலைகளுக்கு தொழிநுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் தொலைக்காட்சிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (08) திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ரீ.நிசாம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத், பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க உட்பட கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின்போதே மேற்படி கல்வியற் கல்லூரி தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி கல்வியற் கல்லூரி அமைக்கப்பட வேண்டிய இடத்தையும் கல்வி அமைச்சரும் முதலமைச்சரும் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

## கைதிகள் துப்புரவுப் பணியில்

திருகோணமலைச் சிறைச்சாலைக் கைதிகள் உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள சிங்கள மத்திய மகாவித்தியாலயத்தில் துப்புரவுப் பணிகளை கடந்த வாரம் முன்னெடுத்திருந்தனர்.

பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் அப்பாடசாலை மைதானத்தை சுத்தமாக்கித் தரும்படி பாடசாலை நிர்வாகத்தால் திருகோணமலைச் சிறைச்சாலைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே இப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## கிண்ணியா நகரசபைத் தலைவர் பாங்கொக் பயணம்

பாங்கொக் நகரில் நடைபெறவுள்ள கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோரம் பேணல் சம்பந்தமான ஒரு வார செயலமர்வில் கலந்துகொள்வதற்காக கிண்ணியா நகர பிதா டொக்டர் ஹில்மி மஹ்ரூப் தாய்லாந்து பயணமாகியுள்ளார்.

இலங்கை பாகாப்பு அமைச்சின் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த கருத்தரங்கு கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோரம் பேணல் சம்பந்தமான விழிப்புணர்வு செயற்திட்டத்தின் கீழ் இடம்பெறவுள்ளது.

## சந்திவெளியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, சந்திவெளி பிரதேசத்தில் அனுமதி பெறப்படாமல் தனியார் காணியொன்றில் புதிதாக அமைக்கப்பட்ட கிறிஸ்தவ சபைக்கு சொந்தமான கட்டிடத்தை உடைத்து சேதமாக்கினர் என்ற சந்தேகத்தின் பெயரில் இளைஞர்கள் கைதாகியதைத் தொடர்ந்து அங்கு மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்று வெடித்தது.

மேற்படி இளைஞர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் நேற்று மாலை டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அவ்விடத்திற்குச் சென்ற ஏறாவூர் காவல்துறைக்கும் மக்களுக்குமிடையில் முறுகல்நிலை ஏற்பட்டது.

இங்கு பதட்டம் நிலவியதால் மேற்படி நிலமைகளை சமாளிப்பதற்காக குறித்த இடத்திற்கு வருகைதந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோ.யோகேஸ்வரன், கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணிதலைவர் சேயோன், முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் அலோசகருமான சி.சந்திரகாந்தன் ஆகியோர் பொதுமக்களுடன் பேசி நிலமையை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை பிணையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர்.

## செய்திக் குறிப்புக்கள்

### சிறையில் கூட அரச கவனிப்பு

கொலைக் குற்றச்சாட்டில் கைதாகி சிறை வைக்கப்பட்டுள்ள தங்காலைப் பிரதேசசபைத் தலைவரைத் தேடி நாளொன்றுப் பல் வருகை தருவதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய சுற்றுலாப் பயணியக் கொலை செய்து அவரது காதலியை வன்புணர்வு செய்த குற்றச்சாட்டின் பிரதான சந்தேக நபரான இவரை பார்க்க வருபவர்கள் சாதாரண பார்வையாளர் மண்டபங்களில் பார்க்கமல் அவருக்கெனத் தனியாக சந்திப்பு அறையொன்று ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கான மூன்று நேரச் சாப்பாடும் வீட்டிலிருந்தே தருவிக்கப்படுவதாகவும் மேலும் அத்தகவல் தெரிவிக்கின்றது.

### மனிதர் வாழ முடியாத வீட்டில் வைத்தியர்கள் வாழுகின்றனர்

மனிதர்கள் வாழ்வதற்கு உகந்ததல்லாத நிலையில் தமது அரச வதிவிடங்களை வைத்தியர்கள் பேணுவதாக ஹிங்குராகொட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் வதிவிடங்களில் மூன்று அரச வைத்தியர்கள் வாழ்வதாகவும் அவர்களாலேயே டெங்குத் தாக்கத்திற்கு உள்ளான நோயாளிகள் மருத்துவப் பராமரிப்பிற்கு உட்படுத்தப்படுவதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.



### 30 மில்லியன் கையாடல்

அரச ஒசுசல நிறுவனத்தின் தலைவர் சுமார் 30 மில்லியன் ரூபாய்களைக் கையாடல் செய்திருப்பதாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிக்காட்டியுள்ளன.

தனக்குரித்தான கம்பனியொன்றிடம் அரச ஒசுசலவின் கட்டடமொன்றைக் கட்டுவதற்கான வேலையை அவர் ஒப்படைத்தமையூடாகவே இதனைச் செய்துள்ளதாக தெரியவந்துள்ளதுடன் இக்கட்டட ஒப்பந்த வேலையைப் பெற்றுக் கொள்ளும் கம்பனி தொடர்பாக அமைச்சரவையையும் அவர் ஏமாற்றியிருப்பதாக அத் தகவல் மேலும் தெரிவிக்கின்றது.

### காதல் வந்தால் கழன்றுவிடும் மார்புக் கச்சை



அணிந்திருப்பவரின் உள்ளத்தில் காதல் உணர்வுகள் மேலிட்டால் மட்டும் கழன்றுகொள்ளக் கூடிய மார்புக் கச்சையொன்றை ஜப்பானிய நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது.

உள்ளத்தின் உணர்திறனுக்கு ஏற்ப தொழிற்படக் கூடிய இம் மார்புக் கச்சையை "ரவிஜோர்" என்னும் நிறுவனம் தனது தசாப்தகால வரலாற்றை நினைவு கூறும் வடிவமாகத் தயாரித்துள்ளது.

"உண்மைக் காதல் பரீட்சிப்பி" எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் உள்ளாடை அணிந்திருப்பவரின் இதயத்தில் ஏற்படும் உணர்வுகளை அறிந்து அதற்கேற்ப கைத் தொலைபேசிக்கு வானலை நுட்பம் ஊடாகச் செய்தியைப் பரிமாறி அக் கைத்தொலைபேசியில் இருந்து கழற்றும் கட்டளையை கச்சை பெற்றுக்கொள்ளும் விதமாகத்தொழிற்படும் என தெரிவித்துள்ளது வங்க நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலப் பத்திரிகைகள் மீதான பார்வை

**ஹேக் மற்றும் பெயர்ட் இருவருமே இலங்கைக்கு எதிரான வாதத்தை தொடங்கிவைப்பர்**

ஐ.நா சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான வாதத்தை பிரித்தானிய வெளிவிவகார செயலர் வில்லியம் ஹேக்குடன் இணைந்து கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயர்ட் இருவருமே ஆரம்பித்து வைப்பர் எனத் தெரிகின்றது.

மார்ச் மாதம் 3ம் திகதி பான்கி மூன், ஐ.நா வின் செயலரின் உரையைத் தொடர்ந்து மனித உரிமை ஆணையர் நந்தம் பிள்ளை அவர்களின் உரை இடம்பெறவுள்ளது. ஆதனைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை இலங்கை தொடர்பான விவாதத்தை மேற்கூறிய இருவரும் ஆரம்பித்து வைப்பர். இங்கிலாந்து வெளிவிவகார செயலாளர் முன் அறிக்கையொன்றை வெளியிட அதனைத் தொடர்ந்து கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயர்ட் இலங்கை தொடர்பாகக் கடுமையான தனது வாதத்தை முன்வைக்கவுள்ளார்.

## ஊழல்களுக்கு நடவடிக்கை எடுக்காத மாணிக்கக்கல் ஆபரண அதிகார சபை

மாணிக்கக்கல் ஆபரண அதிகார சபை (தே.மா.ஆ.ச) யின் இரண்டு சிரேட்ட அலுவலகளுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள பல மில்லியன் ரூபா ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகியுள்ள நிலையிலும் அவர்கள் இருவரினதும் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என தேசிய ஆங்கிலப்பத்திரிகையான சண்டேலீடர் ஆதாரங்களுடன் தகவல் வெளியிட்டுள்ளது.

இவ் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளராகத் தற்போது பொறுப்பேற்றுள்ள ரஞ்சித் அருண மீதும் அதிகார சபையின் முன்னாள் ஆணையாளரான நிமால் பண்டார மீதுமே ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. இதனை நிரூபித்துள்ள அமைப்பு இலஞ்ச ஊழலை ஆராயும் சனாதிபதி புலனாய்வுக் குழு (Presidential Investigation Unit) ஆகும். இப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையை கிடப்பில் போடப்பட்டுள்ளது என்றால் அதனையும் தாண்டி சனாதிபதியின் சிரேட்ட உதவிச் செயலர்களில் ஒருவரான சமன் வாதுவ அவர்களினால் கடிதம் மூலம் முன்மொழியப்பட்ட 'உரியவர்களைக் கடமையில் இருந்து இடை நிறுத்துக' என்னும் முன்மொழிவும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

சனாதிபதி புலனாய்வுக் குழுவால் பட்டியலிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ள நிதி மோசடிகள் வருமாறு:

2012 மாசி மாதம் திரட்டப்பட்ட ரூபா 871000 அனுமதிக்கட்டணம் அதிகாரசபையின் கணக்குகளுக்கு வரவிடப்படவில்லை. அவ்வாறு அதிகார சபையின் கணக்குகளுக்கு வைப்பிலிடாமல் இருப்பதற்கு ரஞ்சித் அருணவிற்கு நிமால் பண்டார அனுமதி அளித்துள்ளார்.

கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட பலரின் கையெழுத்துக்களும் பெயரும் ஆள்மாறாட்டம் செய்யப்பட்டுள்ளதுடன் பிழையானவையுமாகும். அத்துடன் செல்லக்கதிர்காமத்திலுள்ள நவரத்தினக்கல் நிலத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது அலுவலர்க்கு வழங்கப்பட்ட உணவுக்கான உண்மைச் செலவு 300,000 ஆக இருக்க சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் 800,000 செலவு காட்டப்பட்டுள்ளது.

அதற்கும் மேலதிகமாக குடிவகைகளுக்காக வழங்கப்பட்ட கொடுப்பனவுகளாக ரூபா 1,100,000 மற்றும் ரூபா 32,000 பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் வழங்குனராக 'கங்கா ஹோட்டல்' அப்பற்றுச்சீட்டுக்கள் இரண்டும் பொய்யானவை என தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வலுவலரால் முன்நிலைப்படுத்தப்பட்ட ரூபா 347,643 ற்கான பற்றுச்சீட்டு ஒன்று பொய்யானது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'நிசாதி ஹோட்டல்' இடமிருந்து பெறப்பட்டுள்ள 38610 ரூபா மற்றும் 21050 ஆகியன தொடர்பான விசாரணைகளின் போது உரிய இரண்டு பற்றுச்சீட்டுக்களையும், வெற்றுப் பற்றுச்சீட்டுக்களாகவே தாம் வழங்கியதாக ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

துமன்னாவ பிரதேசத்தில் இரத்தினக்கல் அகழ்விற்காக நிலத்துண்டொன்றை ஏல வாடகைக்கு விட்ட போது ஏலத்தில் எடுத்துக் கொண்டவர்களிடமிருந்து 29.64 மில்லியனுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவை காசோலை மூலம் பெறும் படி நிமால் பண்டார அறிவுறுத்தியுள்ளார். ஆனால் அக்காசோலை பணம் இன்றி திரும்பியுள்ளது.

இவ்வளவு குற்றச்சாட்டுக்களுக்கும் இலக்கான ரஞ்சித் அருண தண்டனைகளுக்குப் பதிலாக கடந்த தை மாதம் இவ்வதிகார சபைக்கு பிரதிப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளாராம்.

(மூலம் - சண்டேலீடர் தமிழில் - மாயன்)

## சனநாயகவாதிகளுக்கு முதலில் சிலை வையுங்கள்

சனநாயக வாதிகளின் கொலைக்கு முதலில் ஞாபகச் சின்னங்களை எழுப்புங்கள். – ஜாதிக ஹெல உறுமய

விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சனநாயக அரசியல் தலைவர்களுக்கு முதலில் ஞாகனச் சின்னம் அமையுங்கள். ஆதன் பின்னர் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நினைவுத் தூபியை அமைக்கலாம் என ஜாதிக ஹெல உறுமய வட மாகாண சபைக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

### மாகாண அமைச்சர் ஆகின்றார் ஹிருணிகா

சுட்டுக் கொல்லப்பட்ட சனாதிபதி ஆலோசகரான பாரத லக்ஸ்மன் பிரேமசந்ர வின் புதல்வி ஹிருணிகா மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார். ஆவரை எதிர்காலத்தில் மேல் மாகாண சபைக்கான அமைச்சராக நியமிக்க மந்திரிகளில் பலர் விருப்பம் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அவரது மாகாண சபை வெற்றிக்கு அனைவரையும் கடுமையாக உழகைக்கும்படி சனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

## எகிப்தியப் போரிலும் பாலியல் பலிக்கடாவாகும் பெண்கள்

எகிப்தின் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடும் பெண்கள் சிறைகளில் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதாக அதிர்ச்சி தரும் அறிக்கையினை மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்டுள்ளது.

எகிப்தின் முந்தைய முஹம்மத் முர்சியின் ஆட்சியினை இராணுவம் கவிழ்த்ததைத் தொடர்ந்து, எகிப்து முழுவதும் கலவரங்களும் போராட்டங்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அந்தப் போராட்டங்களில் பங்கு கொள்பவர்களில் பெரும்பாலானோர் பெண்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது

இவ்வாறு, இராணுவத்தின் அத்துமீறலுக்கு எதிராக போராடிய 200 க்கும் மேற்பட்ட பெண்கள் கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது அரசுக்கு எதிராக போராடியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறையிலடைக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் அல் அஸார் பல்கலைகழக மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அந்த சிறைவாசிகளில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களும் அடங்கும்.

இவ்வாறு மாணவர்களையும் முதியவர்களையும் குற்றவியல் சட்டம் அல்லது சிறைபிடிப்பது சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறையிலடைக்கப்பட்ட போராட்ட கைதிகளில் பெண்கள் மீது பல்வேறுவிதமான வன்கொடுமைகள் நிகழ்த்தப்படுவதாக அறிக்கைகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இவ்விடயம் குறித்து எகிப்திய பெண்கள் பாதுகாப்பு மையத்தின் குழுக்கள் "எகிப்திய இராணுவத்தினர் சிறைபட்டிருக்கும் பெண்களின் மீது தடி அடி நடத்துகிறார்கள். அந்தப் பெண்களின் தலை முடிகளை பிடித்து இழுத்து துன்புறுத்துகிறார்கள். மேலும் அந்தப் பெண்களின் ஆடைகளை கிழித்து அவர்களின் அந்தரங்க இடங்களின் மீது கை வைக்கிறார்கள் . காவல் நிலையத்தில் சோதனை என்ற பெயரில் ஆடைகளை க் களைந்து மறைவான



இடங்களில் கை வைத்து சோதனை செய்கிறார்கள். சோதனை முடிந்ததும் அவர்களை ஆண்கள் சிறைச்சாலையிலுள்ள கொடிய குற்றச் செயல்களில் ஈடுபட்டு அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுடன் அந்தப் பெண்களை அடைக்கிறார்கள். அக்குற்றவாளிகள் மூலமும் அந்தப் பெண்களுக்கு ஆபத்து நேருகிறது" என்று குற்றம் சாட்டியுள்ளன.

பிரித்தானிய – அரபு கூட்டமைப்பின் கீழுள்ள மனித உரிமை அமைப்புக்கு இவ்வாறு சிறையிலடைக்கப்பட்டுள்ள போராட்ட கைதிகளின் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து அதிகமான புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அந்த மனுக்களில் 12 மாணவர்களும் எகிப்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது .

மேலும் சிறையில் அடைக்கப்பட்ட பெண்கள் மீது வன்முறை நடத்தப்படுவதாகவும் பாலியல் தொந்தரவுகள் கொடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை மனித உரிமை அமைப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து மேற்கு கென்ரோவிற்கான எகிப்திய பிரதி உள்துறை அமைச்சர் பிரிகேடியர் அலி டமர்தாஸ் இந்தத் தகவல்கள் முழுக்க முழுக்க பொய்யானது. இந்தத் தகவலை மனித உரிமை நிறுவனங்கள் ஏன் பரப்புகிறது என்பது விளங்கவில்லை. எகிப்திய அரசு சிறைவாசிகளிடம் சர்வதேச மனித உரிமை சட்டத்தை பின்பற்றுவதில் எக்குறைபாடும் வைக்கவில்லை" என தெரிவித்துள்ளார்.

ஆனால் மனித உரிமை அமைப்பு உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களுக்குக் கிடைக்கப் பெற்ற புகார்கள் குறித்து நேரில் ஆய்வு செய்ய வேண்டி சிறைக்குள் செல்ல இராணுவத்திடம் அனுமதி கோரிய போது அனுமதி மறுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செனேட்- இலங்கைக்குப் புதிய தலைவலி

சே.சஞ்சயன்





ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வர அமெரிக்கா தயாராகி வரும் நிலையில், அமெரிக்க செனெட் சபையில் பொறுப்புக் கூறுவதற்கான சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தி, மற்றுமொரு தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியின் வடகரோலினா செனெட்டர் றிச்சர்ட் புர், ஜனநாயக கட்சியின் றொபேட் கசேயுடன் இணைந்து இந்த தீர்மான வரைவை சமர்ப்பித்துள்ளார். இதற்கு மேலும் நான்கு செனெட்டர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு தேவையான, உள்நாட்டு மீள்கட்டமைப்பு, மீள்குடியமர்வு, நல்லிணக்கத்துக்கான ஆதரவை வெளிப்படுத்துதல் என்ற தலைப்பில் இந்த தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போரின் போதும், அதற்குப் பின்னரும் இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட மனிதஉரிமை . மீறல்கள் குறித்தும் வெளியான அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு, சுதந்திரமான பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் இணைந்து உருவாக்க வேண்டும் என்று இந்த தீர்மான வரைவில் கோரப்பட்டுள்ளது.

இந்த தீர்மான வரைவு, தற்போது செனெட் வெளிவிவகாரக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு ஒன்றுடன் தொடர்புடைய, தீர்மான வரைவு என்பதால், முதலில் அது வெளிவிவகாரக் குழுவினால் பரிசீலிக்கப்படுவது வழக்கம். அந்த தீர்மான வரைவு குறிப்பிட்ட நாட்டுடனான உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று வெளிவிவகாரக் குழு கருதினால், அதனை, செனெட்டில் சமர்ப்பித்து விவாதிக்க பரிந்துரை செய்யும்.

இப்போது இந்த நடைமுறைக்கே இந்த தீர்மான வரைவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மான வரைவை சமர்ப்பித்திருப்பவர், வொசிங்டனில் ஆட்சியில் இருக்கும், ஒபாமாவின் ஜனநாயக கட்சியை சேர்ந்த செனெட்டர் அல்ல. எதிர்க்கட்சியான, குடியரசுக் கட்சியின் செனெட்டரே, இந்த தீர்மான வரைவை முன்வைத்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்க அதிபர் ஒபாமாவின் ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த செனெட்டர் றொபேட் கசேயும் இதற்கு இணை அனுசரணை வழங்கியுள்ளார்.

ஆக, இந்த தீர்மான வரைவு அமெரிக்க செனெட்டில் விவாதத்துக்கு வந்தாலோ, வாக்கெடுப்புக்கு விடப்பட்டாலோ, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என இரண்டு பக்கங்களிலும் பலமான ஆதரவு இருக்கும் என்று கருதப்படுகிறது.

இந்த தீர்மான வரைவு எப்போது செனெட் வெளிவிவகாரக் குழுவின் முன்பாக விவாதிக்கப்படும் என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

பெரும்பாலும் இந்த தீர்மான வரைவை, செனெட் விவாதத்துக்கு அனுப்பும் முடிவையே வெளிவிவகாரக் குழு எடுக்கும் என்று கருதப்படுகிறது.

ஏனென்றால், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரும் முன்னாயத்தங்களில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஏற்கனவே ஈடுபட்டுள்ளது.

இத்தகைய கட்டத்தில், ஜெனிவாவில் அமெரிக்காவின் நகர்வுகளுக்கு இந்த தீர்மானம் வலுச் சேர்ப்பதாக அமையும் என்று செனெட் வெளிவிவகாரக் குழுவினால் கருதப்படும் சூழல் உள்ளது.

எனவே, செனெட்டில் இந்த தீர்மான வரைவு குறித்து விவாதம் நடத்தப்பட்டாலோ, வாக்கெடுப்புக்கு விடப்பட்டாலோ, பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என்று தகவல்கள் கூறுகின்றன.

சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தும் இந்த தீர்மானம், அமெரிக்க செனெட்டில், நிறைவேற்றப்படுமானால், அது ஒபாமா அரசுக்கும் நெருக்கடியாக அமையும்.

ஏனென்றால், இலங்கை மீது பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை முன்னிறுத்தி, நெருக்கடி கொடுத்து வந்த அமெரிக்கா இதுவரையில், உள்ளகப் பொறிமுறையை மட்டுமே உருவாக்க அழுத்தம் கொடுத்து வந்துள்ளது. அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு இன்று வரை மாறவில்லை.

அதாவது போர்க்குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள் குறித்து நம்பகமான- சுதந்திரமான உள்ளக விசாரணைப் பொறிமுறை நடத்த அமெரிக்கா கோரி வந்துள்ள போதிலும், அரசாங்கம் அதை நிறைவேற்றவில்லை.

ஆனாலும், அடுத்த கட்டம் குறித்து அமெரிக்கா சிந்திக்க வேண்டிய நிலை உள்ள போதிலும், சர்வதேச விசாரணைப் பொறிமுறை குறித்தோ, இலங்கை மீதான தடைகளை விதிப்பது குறித்தோ, அமெரிக்கா இன்னமும் ஆராயவில்லை என்று அண்மையில் கொழும்பு வந்த உதவி இராஜாங்கச்செயலர் நி'ா தேசாய் பிஸ்வால் தெரிவித்திருந்தார்.

இம்முறை, ஜெனிவாவில் அமெரிக்கா எத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளது என்றோ, அதில், சர்வதேச விசாரணைக் கோரிக்கை இடம்பெறுமா என்றோ, இன்னமும் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

இத்தகைய கட்டத்தில், செனெட் சபையில், சுதந்திரமான சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறையை ஏற்படுத்த வலியுறுத்தும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுமானால், அது ஜெனிவா தீர்மானத்தில், சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கும்.

இலங்கையுடன், அதிகம் முரண்படாத போக்கைக் கடைப்பிடிக்க ஒபாமா நிர்வாகம் இம்முறையும் முடிவு செய்திருந்தாலும், இந்த தீர்மானம் அதற்கு கடும் அழுத்தங்களைக் கொடுப்பதாக இருக்கும்.

ஏனென்றால், சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தும் தீர்மானத்தை செனெட் நிறைவேற்றிய பின்னர், ஒபாமா நிர்வாகத்தினால் அதிலிருந்து பின்வாங்குவது சிக்கலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தி வந்த அமெரிக்கா, இம்முறை ஜெனிவாவில், சர்வதேச விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்த திட்டமிட்டிருக்குமேயானால், அதற்கு செனெட்டின் தீர்மானம் இன்னும் வலுச் சேர்ப்பதாக அமையும்.

எது எவ்வாறாயினும் இந்த தீர்மான வரைவு, அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது, இலங்கைக்கு ஒரு சாதகமற்ற சமிக்ஞையையே வெளிப்படுத்தியுள்ளது.

ஏனென்றால், இலங்கைக்கு சாதகமான கருத்தை வொசிங்டனில் உருவாக்கும் நோக்கில் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மேற்கொண்ட பயணம் தோல்வியில் முடிந்துள்ளதை இது மீண்டும் நிரூபித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச்செயலர் நி'ா பிஸ்வாலை, லலித் வீரதுங்க சந்தித்து, அரசாங்கத்தினது நிலைப்பாட்டையும் இலங்கையின் உள்நாட்டு நிலைவரங்களையும் எடுத்துக் கூறிய அடுத்தடுத்த நாட்களிலேயே அவர் கொழும்புக்கு புறப்பட்டார்.

இது லலித் வீரதுங்கவின் கருத்துகளை நி'ா பிஸ்வால் எந்தளவுக்கு செவிமடுத்தார், அவர் கூறியவற்றை எவ்வளவு நம்பினார் என்ற கேள்வியை எழுப்பியிருந்தது.

வொசிங்டனில் பல நாட்கள் தங்கியிருந்து பிரசாரங்களை மேற்கொண்ட போதிலும், நி'ா பிஸ்வால் தவிர்ந்த இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த வேறெந்த அதிகாரிகளும் அவரை சந்திக்கவில்லை.

ஆனால், லலித் வீர்துங்க, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அரசாங்கத்தின் நிலையை தெளிவுபடுத்துவதில் கூடிய அக்கறை காட்டியிருந்தார். அதற்காக, பொதுசனத்தொடர்பு நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் பெருமளவு பணம் செலவிடப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், அத்தகைய பிரசாரங்களை பிசுபிசுக்க வைக்கும் வகையில் இந்த தீர்மான வரைவு செனெட்டின் வாசற்படியை எட்டிப் பார்த்துள்ளது.

இதிலிருந்து அமெரிக்காவின் முடிவில் மாற்றங்களை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நகர்வுகள் இதுவரை தோல்வி கண்டுள்ளதையே உணர முடிகிறது.

அதேவேளை, இந்த தீர்மான வரைவு செனெட்டில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் சூழல் ஒன்று உருவானால், அது இலங்கை அரசாங்கத்தின் தலைவலிகளை அதிகரிக்கச் செய்யும்.

ஏனென்றால், செனெட் ஊடாக கொடுக்கப்படும் அழுத்தங்களை ஒபாமா நிர்வாகம் தானே சுமந்து கொண்டிருக்காது, அதனை இலங்கை மீதே சுமத்த முற்படும்.

# குளக்கோட்டன் என்னும் தர்ம சீலன்

## - பகுதி 03

திருகோணாசலப் புராணம் கோணேஸ்வரத்தின் தலபுராணமாகும். 'சிவன் கோணநாயகராக அவதாரம் எடுத்த வரலாற்றை இந்நூல் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. குளக்கோட்டனின் அன்பான வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட வசிட்டர் என்ற தவசிரேஸ்டர் இந்த அற்புதமான வழிபாட்டை உருவாக்கினார் எனத் தலபுராணமாகிய திருகோணாசலப் புராணம் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

கி.பி.19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்ற இந்நூலைத் தொகுத்தவர் திரு.மா.முத்துக்குமாரு என்பவராவர். குளக்கோட்டன் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பெரும்பாலான ஆய்வாளர்கள் கோணநாயகர் திருவுருவைப் பற்றி இந்நூல் கூறும் கருத்துக்களை தமது ஆய்வுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டனர் என்றே சொல்ல வேண்டும்.

குளமும் கோட்டமும் கட்டிய மன்னனின் முகத்தில் கவலை சூழ்ந்திருப்பதைக்கண்ட தவசிரேஸ்டரான வசிட்டர் மன்னனை அணுகி "மன்னா உன் மனதில் தோன்றிய வண்ணம் குளமும் கோட்டமும் கட்டிவிட்டாய். மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய உன் முகத்தில் வாட்டம் தெரிகிறதே! காரணத்தை நான் அறியலாமா?"எனக் கேட்கிறார். வசிட்டரின் இந்தக் கேள்வி குளக்கோட்டனின் மனக்கிடக்கையை வெளிக்கொண்டு வருகிறது.

ஐய கேள் அடியேன் உன்றன்
அருளினால் இயற்றும் இந்தச்
செய்ய பொன் ஆலயத்தில்
தேவர் மாதவர்கள் போற்றும்
மெய்யனை உமையினோடும்
விழிகளால் தரிசித்தே யான்
உய்ந்திட அருளை ஈவாய்
என்றனன் உவணை வென்றோன்.

திருகோணாசலப் புராணத்தில் 'திருப்பணிசெய் படலத்தில்' இப்பாடல் வருகிறது. குளக்கோட்டன் தான் கட்டிமுடித்துள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்ய இருக்கும் இறைவனின் வடிவம் குறித்து பெரிதும் ஆலோசித்தான். தன்னால் உருவாக்கப்பட்ட



ஆலயப்பணி குறைவின்றி நடைபெற 'வேண்டும்போது மழையும் , வெயிலும் தரக்கூடிய' இரங்கிய நிலையில் மாதுமை பங்கனை வடிவமைப்புச் செய்து தருமாறு வேண்டினான். இந்த இடத்தில் குளக்கோட்டனின் தர்மசிந்தனை வெளிப்படுகிறது. தான் கட்டிய கோயில் சிறப்புற மக்கள் செல்வச்செழிப்புடன் வாழவேண்டுமென அவன் கருதினான்.

சந்திரசேகரர் , சோமாஸ்க்கந்தர் போன்ற சாஸ்திர ரீதியான சிவவடிவங்கள் இருக்கும் போது மாதுமை பங்கரை வேறுவிதமாக வடிவமைப்புச் செய்து தருமாறு குளக்கோட்டன் வேண்டுவது கவனிக்கத் தக்கது. தன்னால் உருவாக்கப்பட்ட குளமும், கோட்டமும், குடியிருப்புகளும் ஒரு குறைவுமின்றிச் செல்வச் சிறப்போடு இருக்க வேண்டும் என்பதில் அவன் உறுதியாகவும் பிடிவாதமாகவும் இருந்தான். பின்னாளில் அவன் வகுத்த திட்டங்கள் இதனைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

கோணேசர் கல்வெட்டு பெரியவளமைப்பத்ததி போன்ற நூல்கள் மூலம் இதனைநாம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. மன்னன் வேண்டுவதுபோல நெல்விளைவிப்போர் வேண்டும் போது மழை வெயிலைத் தரக்கூடிய ஒரு வழிபாட்டு முறையை உருவாக்க வேண்டி இறைவனின் திரு உருவில் மாற்றமும் செய்து கிரிகைகளில் மாற்றங்களும் செய்து

'திண்திறல் அரக்கன் தன்னைச்
செயித்தருள் செய்தேயாண்ட
முண்டக மலர்த்தாள் கொண்ட மூர்த்தம்'

என இரு கரங்களுடன் வலக்காலைத் தூக்கிய நிலையில் 'கோணநாயகர் திருவுருவை' அமைத்து ஆகமங்களுள் தலையாய 'மகுடாகம கிரியைகளிலான' உருவ, அருவ வழிபாடாக கோணேஸ்வர வழிபாட்டை இருபிரிவுகளாக்கி வசிட்டமாமுனி குளக்கோட்டனுக்கு வழங்கினார் எனத் திருகோணாசலப்புராணம் கூறுகிறது.

தொடரும் ........

**வே.தங்கராசா**
தம்பலகாமம்.

# இப்படியும் நடக்கலாம் !!!

**பாலையூற்றான்**

சிலருக்கு வாழ்க்கையில் தானாக தொல்லைகள் தேடிவரும். சிலருக்கு தொல்லைகளை தருவதற்கென்றே பலர் பிறந்திருப்பார்கள். தொல்லைகள் இல்லாமல் எவரும் வாழ முடியாது. தமது வாழ்நாளில் என்றைக்காவது ஒரு நாள் ஒருவர் தொல்லைகளை சந்தித்தே ஆகவேண்டும். அது வாழ்க்கைச் சக்கரத்தின் நியதியாகும்.

மூதூர் தொகுதியின் பாலத்தடிச் சேனை கிராமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அவன் க.பொ.த (சா.த) பரீட்சையில் திறமைச் சித்திகள் நான்குடன் குறித்த பரீட்சையை நிறைவு செய்து நல்லதொரு அரசாங்க தொழிலுக்காக காத்துக்கொண்டிருந்தான்.

ஆன்று ஆளும் தரப்புடன் கூட்டுச் சேர்ந்த கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொழில் வாய்ப்பு ஒதுக்கீடுகள் (கோட்டா) வழங்கப்பட்டிருந்தன. அந்த வகையில் அரசாங்கத்தை சார்ந்த தமிழ் கட்சியொன்றின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பரிந்துரையில் அவன் தொழிலொன்றைப் பெற்றிருந்தான்.

ஆந்த நிறுவனம் ஒரு சாதாரண நிறுவனம் அல்ல. கோடி கோடியாக அரசுக்கு பணம் சம்பாதித்துக் கொடுக்கும் நிறுவனமாகும். ஆங்கு சிற்றூழியராக பணிபுரிந்தாலும் கையை நன்கு வீசி செலவழிக்கும் அளவுக்கு நல்ல வேதனம் கிடைக்கும். அதுதான் இலங்கை துறைமுக சபை.

அவனது முதல் நியமனம் நானாவித தொழிலாளி நியமனமாகும். புலத்தடிச் சேனை கிராமத்தில் அவன் ஒருவனே இலங்கை துறைமுக அதிகார சபையைச் சார்ந்த ஊழியனாவான். தேர்தல் காலத்தில் குறித்த தமிழ் கட்சியில் வெற்றிக்காக அயராது பாடுபட்ட இளைஞர்களிடையில் உரிய பதவிக்கு தகுந்த கல்வித் தகைமைகளும், ஏனைய தகமைகளும் அவனிடம் இருந்ததால் குறித்த தொழிலைப் பெறுவதில் எவ்வதி சிக்கல்களும் அன்று இருக்கவில்லை.

அவனது நியமனம் மூன்று வருட கால தகுதிகாண் அடிப்படையில் வழங்கப்பட்டதாகும். அக்குறித்த காலப்பகுதியை மிகச் சிறப்பாக எவ்வித குறைகள், குற்றங்கள் இன்றி முழுமைப்படுத்தியதால் அவனது பதவியில் அவன் நிரந்தரமாக உறுதி செய்யப்பட்டிருந்தான்.

சேவையில் சேர்ந்து ஓரிரு வருடங்களுக்குள் அவனுக்கு திருமணமும் நடந்தேறியது. சுமார் பதினேழு வருட காலத்தை சேவையில் பூர்த்தி செய்த பின் எதிர்பாராத ஒரு திடுக்கிடும் தகவல் அவனை அதிர வைத்தது.

வேலையில் சேர்ந்த பொழுது அவன் அன்று தனது நிறுவனத்திற்கு வழங்கியிருந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் போலியானதென்பதே அவன் மேல் சுமத்தப்பட்ட பாரிய குற்றச்சாட்டாகும். அது தொடர்பாக அவன் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டான்.

அவன் தனது உண்மையான நிலைமையை விசாரணையின் போது தெளிவுபடுத்தியும் விசாரணை அதிகாரிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இத்தனைக்கும் அவன் தனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை ஆர்ப்பரித்து பல விடயங்களை மேற்கொண்டிருந்தான். மேலும் அப்பத்திரம் எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவனது திருமணம், பிள்ளைகளின் பிறப்பு, சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை போன்ற நடவடிக்கைகளுக்கு அந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தான். ஆனால் அவ்வேளையில் அது குறித்து எந்தவித குளறுபடிகளும் இருக்கவில்லை. ஆனால் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு சுமார் 17 வருடங்களை கடந்த பின்னரே இப்புதிய பிரச்சனை எழுந்துள்ளது.

ஆனால் அவன் எதற்கும் சோர்வடையவில்லை. தான் கல்வி பயின்ற பாடசாலைக்குச் சென்று தனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைக் கோரிய போது வன்செயல் காலங்களில் குறித்த பாடசாலை தீக்கிரையாக்கப்பட்டதால் அனைத்து ஆவணங்களும் அழிந்துவிட்டன என அப்பாடசாலையால் அவனுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் அக்காலப்பகுதியில் இளைஞர்கள் வெளியில் நடமாட அஞ்சினர். அதனால் அவனது பிறப்பிடமான பாலத்தடிச் சேனையிலிருந்து திருகோணமலை நகரத்திற்கு அன்று தனது மகனை அனுப்ப அவனது தகப்பனார் விரும்பாமல் அவரே திருகோணமலை பிறப்பு, இறப்பு, பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று தனது மகனின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்து அதன் மூலப்பிரதியை பெற்றிருந்தார். முதல் நியமனத்தின் போது அப்பிரதியையே அவன் சமர்ப்பித்திருந்தான். ஆந்த மூலப்பிரதியை அவனது சகல தேவைகளுக்கும் அவன் உபயோகித்து வந்தாலும் அவனிடம் மேலதிக பிரதிகள் இல்லாததாலும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் குளறுபடியை நிவர்த்தி செய்வதற்காக தற்பொழுது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவின் பதிவாளர் அலுவலகத்தில் தனது பிறப்பு அத்தாட்சிப் பதிரத்திற்காக அவன் தானாகவே விண்ணப்பித்திருந்தான். மேலும் பதிவாளரின் வசதிக்காக தனது தகப்பனாரால் முன்னர் பெறப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் அத்துடன் இணைத்து சமர்ப்பித்திருந்தான்.

ஆனால் அவனது பெயரில் எந்தவித பதிவும் இல்லை என தெரிவிக்கப்பட்டதையடுத்து மூன்று வருட தேர்தல் காலத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்ட பொழுது அவனது சொந்தப் பெயரில் வேறு ஒரு புதிய இலக்கத்தின் கீழ் பதிவு கண்டுபிடிக்கப்பட்டது. முன்னைய பத்திரத்தின் இலக்கத்தின் கீழவேறு ஒருவரின் பெயர் பதியப்பட்டு இருந்தது.

அந்த உண்மையான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை அவன் தலைமையகத்துக்கு சமர்ப்பித்தும் அவர்கள் அதை பரிசீலனை செய்வதற்கு எந்தவித நடவடிக்கையோ அல்லது அதை ஏற்றுக் கொள்ளவோ இல்லை. அதற்குப் பதிலாக ஒரே ஒரு காரியத்தை மட்டும் செய்திருந்தார்கள். அதாவது அவனை உடனடி வேலை இடைநிறுத்தம் செய்திருந்தார்கள்அதன் பின் அவனுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணை இடம்பெற்றது. அவனது சார்பில் நலன்காப்பு உத்தியோகத்தர் ஒருவர் தோன்றி உண்மையான நிலைப்பாட்டை அங்கு தெளிவுபடுத்தி உண்மையான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் சமர்ப்பித்திருந்தார்.

ஓரிரு வாரங்களுக்குப் பின் அவன் முற்றாக சேவையிலிருந்து நீக்கப்பட்டதாகவும், அவனுக்குரிய சம்பளத்தையும், உரிய பணிக்கொடையையும் பெறுமாறு அவனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

காடுப்பனவு வழமையான வழமையாக பணிக்கொடை எனும் கொடுப்பனவு உடனடியாக என்றுமே எந்தவொரு நிறுவன ஊழியருக்கும் வழங்கப்படுவதில்லை. இவனுடைய விடயத்தில் நிறுவனம் ஒரு தந்திரோபாயத்தை கையாண்டிருந்தது. அதாவது குறித்த கொடுப்பனவை அவன் பெற்றிருப்பாராகில் மீண்டும் அவனுக்கு வேலை வழங்க சந்தர்ப்பம் கிஃத்திருக்காது. அதுமாத்திரமல்ல முன்னைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பரீட்சித்தது போன்று பின்னர் வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் உண்மை நிலையை கண்டறிவதில் நிறுவனம் சற்று தயக்கம் காட்டியமை பெரும் மர்மமாகவே இருந்தது.

எப்படியும் அவனை வேலையிலருந்து முற்றாக வெளியேற்றுவதிலே நிறுவனம் ஆர்வம் காட்டி செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆனாலும் அவனுக்கு அறிவுரை வழங்க ஆட்களா இல்லை?

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு எதிராக தொழில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய அவன் பலரால் அறிவூட்டப்பான். தேவையான ஆவணங்களுடன் அநீதி சுட்டிக்காட்டப்பட்டது.

போலியான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தமை அங்கு பிரதான குற்றச்சாட்டாக நிறுவனம் நிரூபிக்க தவறவில்லை. அது மாத்திரமல்ல தொழில் வழங்குநர் ஊடாகவே வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு செய்யத்தவறியதால் விண்ணப்பதாரியின் மனு நிராகரிக்கப்பட வேண்டுமெனவும் நிறுவனம் மிக அழுத்தமாக சுட்டிக்காட்டியிருந்தது.

தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# இதய ஊற்று

மேனுகா வேலாயுதம்

சில வேளைகளில் சில மனிதர்கள் கல் நெஞ்சக் காரர்களாகவே இருக்கின்றனர். ஆபத்தான வேளைகளிலும் கூட, அன்றும் அப்படித்தான் மேனா விடியற்பொழுது தனது வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு இறை பிரார்த்தனைக்கு சென்றாள். இறைவனை வணங்கி விட்டு பாடசாலை போவது அவளது வழக்கம். ஏவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் மேனாவின் பெற்றோர் குடும்பத்தை நடாத்தி வந்தனர். மேனாவோடு சேர்த்து வீட்டில் ஆறு பேர் இருக்கின்றனர். மேனாவின் சகோதரிகள் மூவர் திருமணம் செய்து தொலைவில் இருக்கின்றனர். மேனா வீட்டில் கடைசி மகள். 'கடை குட்டி' என்று மேனாவை எல்லோரும் அழைப்பார்கள். மேனாவின் கிராமம் மிக அழகானது. வயல் வெளிகளும், தோட்டங்களும், புல்வெளிகளும் நிறைந்த அழகான ஊர் அது. மேனாவின் தந்தை அரச ஊழியர் முப்பது நாள் கஷ்டப்பட்டு சைக்கிள் ஓடினாலும் பத்தாயிரம் தான் சம்பளம். ஏதோ இந்த பணத்தைக் கொண்டு மதிப்பும், மரியாதையோடும் கௌரவமாக இருந்து குடும்பத்தை சிரமத்தின் மத்தியிலும் அதை காட்டிக் கொள்ளாமல் பிள்ளேகளை வளர்த்து வருகின்றார்.

ஒரு மாதிரி பிள்ளைகள் எல்லோரையும் படிக்க வைச்சிட்டார். மேனாவின் சகோதரி ஒருவரும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்றார். மேனா காலையில் பாடசாலைக்கு போறது என்றால் வீட்டை ஒரு ரகளை பண்ணிவிடுவாள். மேனா கறுப்பு நிறம், அவளது சகோதரிகள் அவளை விட கொஞ்சம் நிறமானவர்கள். அதனால் எப்போதும் சகோதரிகளிடையே சிறுசிறு சண்டைகள் தோன்றி மறையும். மேனாவோட அம்மா லெச்சுமி. மேனாவுக்கு சப்போட் பண்ணுவாங்க, என்ற மகள் கடைக்குட்டி கறுப்பு என்றாலும் கஸ்தூரி மாதிரி என்று பெருமை பேசுவார். இதனால் மேனா சற்று ஆறுதலடைவாள்.

அன்றைய பொழுது கூட மேனா பாடசாலைக்கு போவதற்கு ஆயத்தமாகி பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டாள். பாடசாலை தொலைவில் இருப்பதால் பல காடு மேடுகளை கடந்து செல்ல வேண்டியுள்ளது. ஆனால் மேனா இதற்கெல்லாம் சளைத்தவள் இல்லை. மேனா சிறுபராயத்தில் இருந்தே இதே பாதையில் நடந்து செல்வதால் மேனாவுக்கு பழக்கப்பட்ட பாதையாயிற்று இது...

வழியில் இருபுறமும் வளர்ந்திருக்கின்ற உண்ணி பூக்களை பறித்து பாதையில் விளையாடிக் கொண்டு செல்வாள் மேனா. பட்டாம் பூச்சிகள் பறந்து செல்வது போல பாடசாலை பிள்ளைகள் எல்லோரும் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தனர். அதற்கு மேனா மட்டும் விதிவிலக்கா என்ன!

அவளது நடையும் விரைவாக இருந்தது. அப்போது பாதையில் நடந்த சம்பவம் அது. யாரோ ஒரு இளைஞர் வயது இருபது இருக்கும். கையிலே சில காகிதங்களை வைத்துக் கொண்டு ஒவ்வொருவரிடமும் கொடுத்துக் கொண்டு வந்தார். அவர் கொடுத்த காகிதங்களை பார்க்காமலே சிலர் வீதியிலே வீசி விட்டுச் சென்றனர். மேனா பாடசாலை சந்தியை கடக்கும் தருவாயில் அந்த இளைஞனும் வீதியைக் கடக்க முற்பட்டான். இடையில் வீதியின் நடுவே வரும் வாகனத்தை இருவரும் கவனிக்வில்லை. எதிர் எதிர் திசைகளில் இருந்து இருவரும் வீதியை கடக்க முற்பட்ட போது அந்த இளைஞர் ஆட்டோவில் அடிபட்டு கீழே விழுந்தான். அவர் கையிலிருந்த காகிதங்கள் எல்லாம் மேலே சிதறி பறந்தன. மேனாவின் சீருடையிலும் சாரல் இரத்தத் துளிகள் பறந்து வந்து படிந்தது. அதிர்ச்சியடைந்த மேனா ஐயோ என்று கத்தினாள். ஓடிச் சென்று அந்த இளைஞரை தூக்க முற்பட்டாள். அந்த ஆட்டோவில் வந்தவர் மேனாவின் உறவினர். மேனா அவரின் உதவியோடு அந்த இளைஞரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றாள். அந்த இளைஞருக்கு அவசர சிகிச்சை பிரிவின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேனாவின் பாடசாலை சீருடை எல்லாம் இரத்தமாக இருந்தது. அதனால் அவள் அன்று பாடசாலை செல்வது பற்றி நினைக்கவில்லை.

அப்போது மேனாவின் கைகளிலே ஒரு காகிதம் சிக்குண்டு இருப்பதை உணர்ந்தாள். அதனை எடுத்து வாசித்தபோது, எனது பெயர் தோமஸ். எனக்கு சிறுவயதிலிருந்தே இதய நோய் உள்ளது. அதனை இன்னும் ஒரு மாதத்தினுள் குணப்படுத்த வேண்டும். அதற்கு ஐந்து இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. எனக்கு உதவி செய்ய யாரும் இல்லை. எனது தாயை தவிர வேறு எவரும் இல்லை. எனது தாய்க்காக சரி நான் உயிரோடு வாழ வேண்டும். எனது தாய்க்கு என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. கருணை உள்ளம் கொண்டவர்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

இதைப் படித்து முடித்த மேனா அதிர்ச்சியில் ஆழ்ந்தாள். அவருக்கு எப்படி என்றாலும் உதவி செய்ய வேண்டும் என்று எண்ணினாள். அப்போது அங்கு வந்த டொக்டர் மேனா நீங்க தோமஸோட உறவினரா என்றார். இல்ல அது வந்து டொக்டர்... மேனா கதைத்துக் கொண்டு இருக்கிறதுக்கு இது நேரம் இல்லை. தோமஸ் இப்ப உயிருக்காக போராடிக் கொண்டிருக்கின்றார். ஆட்டோ அவரது இடது பக்கம் நல்லா தாக்கியுள்ளதால் அவரது நிலை மிக மோசமாக இருக்கு. இந்த ஒரு நாளைக்கிடையில் அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். இல்லை என்றாள் அவரை பிழைக்க வைக்க முடியாது. ஏன்னால் எதுவுமே செய்ய முடியாது. ஊங்கட உறவினர்களுக்கு சொல்லி விடுங்கோ என்றார் டொக்டர். மேனா ஐஸ்கட்டி போல் உறைந்து போய் நின்றாள். மேனாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

தோமஸின் தாயாருக்கு அறிவிக்க வேண்டும் என்று புலம்பினாள். அதற்கு முன் தனது சீருடையை மாற்ற வேண்டும் என்று எண்ணினாள். தாதி ஒருவர் வந்தார். தோமஸை பார்க்கலாம். போய்ப் பாருங்க என்றாள். மேனா தோமஸை பார்ப்பதற்கு அறைக்குள் சென்றாள். தோமஸ் அருகில் நெருங்கி சென்றாள். தோமசுக்கு செலேன் ஏற்றப்பட்ட நிலையில் மயக்கமாக இருந்தார். மேனா அண்ணா என்று அழைத்தாள். விழித்துக் கொண்டான் தோமஸ். மேனா அண்ணா உங்களை நான் எப்படி என்றாலும் காப்பாற்றி விடுவேன். நீங்க தைரியமாக இருங்கோ. இறைவன் துணை புரிவான். உங்கட அம்மாவுக்கு தகவல் சொல்லி அனுப்பிவிட்டேன். எனக்கு தெரிஞ்ச உறவினர்களிடம் கேட்டு பணத்துக்கு நான் ஏற்பாடு செய்கின்றேன். நீங்க கவலைப்படாமல் இருங்க என்றாள். தோமஸ் மேனாவின் கைகளை இறுக பற்றிக் கொண்டு 'என்னைக் காப்பாற்றம்மா' என்று அழுதான். அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளியே வந்த மேனாவால் அழுகையை அடக்க முடியாமல் அழுதுவிட்டாள்.

யாரென்று தெரியவில்லை. ஆனால் தோமஸை பார்க்கும் போது ஏதோ அவளின் உடன் பிறப்பு போன்ற எண்ணம்.மேனாவுக்கு அண்ணா என்று அவனை அணைத்துக் கொண்டு அழ வேண்டும் போல் இருந்தது. அதனை அவள் உள்ளத்துக்குள்ளே புதைத்துக் கொண்டாள். ஏனென்றால் அவள் கண் முன்னே இவ்வாறான விபத்து இதுவரை காலமும் நிகழவில்லை. அதனால் அவள் மனம் பெரிதும் பாதித்தது. மேனா உடனே தனக்கு தெரிந்த ஒருவருக்கு போன் பண்ணினாள். அவர் பெயர் ரூபஸ். அவரிடம் நடந்த விடயங்களை சொன்னாள். அவர் பணம் தருவதற்கு சம்மதித்தார். உடனே தோமஸின் பெயரில் வைத்தியசாலையில் பணம் கொடுக்கப்பட்டது. ரூபஸ் அவரும் வைத்தியசாலைக்கு விரைந்து வந்தார். ஆப்பிரேஷன் செய்யும் படி வேண்டிக் கொண்டார். டொக்டர், வைத்தியசாலை செலவுக்கு பணம் கொடுத்துவிட்டாய் மேனா எனது செலவுக்கு என்ன தருவ என்றார். அருகில் நின்ற ரூபஸ் பொங்கி எழுந்தார். ஊயிரை காப்பாற்றும் டொக்டர் இலஞ்சம் கேட்பதா? ஏன்று சீற்றம் கொண்டார்.

மேனா ரூபஸை சமாதானப்படுத்தினாள். அவளது குறிக்கோள் தோமஸை உயிர் பிழைக்க வைப்பது மட்டுமே. நீங்க ஆப்பரேஷனுக்கு தயார் செய்யுங்கோ, நீங்க கேட்ட பணத்தை நான் தருகின்றேன் என்றாள். ஏதோ ஒரு ஆவேசத்தில் சொல்லி விட்டாள். புணத்துக்கு என்ன செய்வது என்று புரியாமல் கைகளை பிசைந்தாள். மேனாவின் கையில் ஒரு பவுண் மோதிரம் இருந்தது. அது மேனாவுக்கு ஆசையாய் அவளது அப்பா வாங்கிக் கொடுத்தது. இவ்வளவு காலமும் அந்த மோதிரம் அவள் கைகளை விட்டு கழறவே இல்லை. எவ்வளவு கஸ்டத்திலும் அது அவள் கையிலே இருந்தது. இன்று [illegible] போது அது [illegible] மோதிரத்தைக் கழற்றி டொக்டரிடம் கொடுத்தாள். அதை தடுக்க முயன்ற ரூபஸ் தோற்றுப் போய்விட்டார். டொக்டரின் முகத்தில் ஒரு புன்சிரிப்பு மோதிரத்தோடு உள்ளே சென்றார்.

சில விநாடிகளுக்கு பிறகு டொக்டர் வெளியே வந்தார். தோமஸ் உயிருக்கு இப்போது ஆபத்து எதுவுமில்லை. ஆப்பிரேசன் நன்றாக முடிந்தது என்றார். இதை கேட்டதும் மேனாவின் முகத்தில் மலர்ந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. அவள் உடல் சிலிர்த்தது. எதையோ வென்றுவிட்டதாக பூரித்துப்போனாள். அருகில் நின்ற ரூபஸ் அவர்களுக்கு நன்றி கூறினாள். உங்களின் உதவி இல்லையேல் அவரைக் காப்பாற்றி இருக்க முடியாது என்றாள். நான் இப்ப தோமஸ் அண்ணாவைப் பார்க்கலாமா டொக்டர்?

ஆம் தாராளமாக போய் பார் என்று கூறிய டொக்டர், 'மேனா உன்னால தான் அவன் உயிரோட இருக்கான். உன்னுடைய நல்ல எண்ணத்தை நான் எப்படி பாராட்டுவது என்று தெரியவில்லை. நீ தோமஸை காப்பாற்றும் முயற்சியில் எவ்வளவு உறுதியாக இருக்கின்றாய் என்று பார்க்கத்தான் உன்னிடம் பணம் கேட்டேன். கடவுள் எப்போதும் கஷ்டத்தில் இருப்பவர்களைத் தான் சோதிப்பான். அது போல நானும் உன்னை சோதித்துப் பார்த்தேன். ஆனால் நீ எந்தத் தயக்கமும் இல்லாமல் நான் பணம் தருகின்றேன் எனக் கூறி உன் மோதிரத்தைக் கழற்றித் தந்தாய். உன் தைரியத்தைப் பாராட்டுகின்றேன். இந்தா உன் மோதிரம்' என மோதிரத்தை மேனாவின் கைகளில் கொடுத்துவிட்டு டொக்டர் தனது அறையை நோக்கிச் சென்றார்.

மேனா தோமஸின் அறைக்குச் சொன்றாள். என்ன நினைத்தாலே தெரியவில்லை. கதவின் ஓரத்திலே நின்றுவிட்டாள். தோமஸின் கைகள் மேனாவை அழைக்கின்றது. அருகில் நின்ற தாதிகள் அறையை விட்டு வெளியே சென்ற பின் மேனாவுக்கு அடக்கி வைத்திருந்த அழுகை குரல் வரை வந்து விக்கித் தவிக்கின்றன. எங்கிருந்தோ வந்து எனக்கு உதவி செய்து என்னைக் காப்பாற்றினாய். நான் உனக்கு எப்படி நன்றி சொல்வேன் என்று கூறிய போது இருவர் கணகளிலும் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

சில நிமிடங்கள் இருவரும் எதுவும் பேசவில்லை. ஆனால் இருவரின் கண்களும் அதிகமாக பேசியது. அது அன்பின் பிணைப்பு. புதிய சகோதரப் பாசம். அது இருவரையும் விட்டு அகலவில்லை. நேரம் மூன்று மணியாகிவிட்டது. மேனாவைத் தேடிக் கொண்டு அவளின் பெற்றோர் வைத்தியசாலைக்கு வந்து விட்டனர். நடந்த நிகழ்வுகளை ரூபஸ் மேனாவின் பெற்றோருக்கு எடுத்துக் கூறினார். இப்படியொரு பிள்ளையை பெற்றதற்கு அவர்கள் பெருமைப்பட்டனர். எங்கு யாருக்கு என்ன நடந்தாலும் உதவி செய்யுங்கள். அந்த உதவி உங்களுக்கு நன்மையை உண்டாக்கும். மேனாவைப் போல உதவி செய்யும் மனப்பாங்கு யாவருக்கும் இருந்தால் பாசம் என்றுமே அழியாது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்ட மரம்



காய்த்த மரம்
கல்லடிபட்டு நின்றது..

வளவுப் பொடியள்
எறிகின்ற கல்லால்
அடிக்கடி
காயப்பட்டுப்போன பொழுதில்
காற்று
நானிருக்கிறேன்
என்று கொஞ்சிப்போனது..

பறவைகளும்
கிளையில்
குந்தியிருந்தபடி
சில்மிஷம் செய்ய
மனது
காதல் கொண்டது..

நட்ட இடத்திலேயே
ஏன்
நிற்கும்படி
இறைவன் வைத்தான்?
எனி
காய்க்காது..
காதல் கொள்ள
முடியாது
என
வெறுப்பாய்
மனிதர்களுடன்,
பறவைகளும்..

கிட்டி அடிக்கலாம் என
பொடியளும்
கிளை ஒடித்துச் சென்றனர்..
குளிருக்கு
ஒளியவென
கூடுகட்டிய
குருவிகளைக்
கலைத்தன
'கெட்டிபோல்'
ஒன்றின் கல்பட்டு..
மழை வெள்ளம்
அடைக்கவென
மண் அள்ளிச் சென்றனர்..

விறகுக்கும்
உதவாது என பேரம்
பேசியவர்
'அறா'விலைக்கு
அறுத்துசென்றார்..
நான் குந்தியிருந்த
நிலத்தோடு
பெயர்த்தபின்..
மண்ணும்
சொந்தமில்லையாம்...

வாரிசாய் ஒன்றும்
வாய்க்காத
இந்த பட்டமரம்
இங்கிருப்பது
நல்லதல்ல என
உரிமை
பாராட்டியவர்களே
விலகிப்போனார்கள்.
சொந்தம்
கொண்டாடிய
குருவிகளும் மறந்து போயின..
நான் நின்ற இடம்
இன்னொரு
வாழ்க்கை வாழ ஏதாவது அமையலாம்..
புதையுண்டு போன
கனவுகளுடன்
பயணித்தது பட்டமரம்...

- முல்லைஅமுதன் -

# நேரமில்லை!

சுருக்குங்கள் விரிக்காதீர்,
சொற்கேட்டு நடவுங்கள்!
பெருக்காதீர் பிரிச்சிடுவீர்,
பேச்சைச் செவிமடுப்பீர்

கூட்டாதீர் கழியுங்கள்
குறள் வடிவமாக்குங்கள்
காட்டாதீர் பரப்பதனை,
கையளவு போதியதாம்!

பாரதங்கள் இப்பொழுது
படித்தறிய நேரமில்லை
வாரம் ஒரு நாளே
நவ்தாலும் ஒரு மணியே

எழுத்தெழுதிக் காட்டியவர்
எம் குறளார் வள்ளுவரே
அழுத்துவோம் அவர் நோக்கை
அதனைப் பின்பற்றுவமே!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

# The God is Dead

பிரான்சில் நடைபெற்ற மொபைல் குறும்பட போட்டியில் சதாபிரணவனின் "God is Dead" குறும்படம் அதிக மக்கள் விருப்பு வாக்குளை பெற்று "மக்கள் தெரிவு விருதை" பெற்றுக்கொண்டது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் தாக்கத்தை கூறும் இப்படம் 27.237 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளது. இலங்கையில் ஈழத்தமிழரின் இன்றைய நிலையை மிகக் கச்சிதமாக "God is Dead" குறும்படம் கூறுகின்றது.

சுமார் 800 குறும்படங்கள் போட்டியில் கலந்து கொண்டபோதிலும் 50 படங்கள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று பிரான்ஸில் விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் புழன ளை னுநயன குறும்பட குழுவினரும் மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது இயக்குனர் சதாபிரணவனிடம் ஆச்சரியத்துடன் பேசிய நடுவர்கள், இவரது படங்களில் யுத்தத்தின் வடுக்கள் பற்றி பேசப்படுவது பற்றி கேட்டுள்ளார்கள். அதற்கு மிகவும் இயல்பாக "நாங்கள் போரின் கொடுமையை அனுபவிக்கும் இலங்கையில் இருந்து வந்த ஈழத்தமிழர்" என பதிலளித்துள்ளார்.

தற்போது பிரான்சில் இருக்கும் இயக்குனர் சதாபிரணவனை வணக்கம் லண்டன் இணையம் தொடர்புகொண்டு "மக்கள் தெரிவு விருது" பற்றிக் கேட்டபோது. "விருது கிடைத்தது மகிழ்ச்சி மற்றும் எமக்குக்கிடைத்த இந்த சந்தர்ப்பத்தில் எமது அவலத்தின் ஒரு முகத்தை உலகுக்கு காட்ட முடிந்தமையே அதிக திருப்தி தருகிறது" என பதிலளித்தார். அவரது குரலில் பெருமிதம் நிறைந்து இருந்தது.




## நெசவு இழை

கந்தலான சருகுகளை பருவச் சீட்டாக
எறிகிறது மரம்

தறிகெட்ட வேகத்தில் கப்பல் விட
ஓடுகிறார்கள் சிறுவர்கள்
என்னைக் கடக்கும் நண்பிகளின்
விரிந்த குடைகள் வழக்கம்போல்
வெகு தூரம் பறக்கின்றன
ஓரத்தில் நடைவண்டி
பிணம்

குப்பைச் சாக்கு
ஒவ்வொன்றாய் ஒதுங்கிமமமமம
எதிர்ப்படுவதற்றில் மோதி
எல்லாம் நெசவின் இழைகள்போல்
விலகுகின்றன

தாடை மண்ணில் பதியும் படியாய்
அங்கொரு முனிவர் விழுந்து எழுகிறார்

செப்பனிட அவகாசமில்லாமல்
வீதிகள் பொந்துகளாகிச் சக்கரங்கள் சிதைகின்றன
வீடுகளின் முகங்கள்
முகங்களோடு பொருதுகின்றன
மனந் திரும்பு காற்றே
யாரும் ஏவலுக்கும் வீசாதே
பொறு

வரும்முறை நீ கை தட்டி அழைக்க
எல்லோரும் ஒருமுறை திரும்பியும் பாராமல்
வகுப்பில் பாடங்களை நேசிக்கிறோம்.

-நதீல்- (நன்றி- எதுவரை)

## என்னை இழந்த எச்சம்

என் மூளை அது சேமித்த
அறிவும் நினைவும் உறவும்
ஒரு தொகை.
ஆசையும் போட்டியும் பொறாமையும்
இன்னொரு தொகை.

அருகே இருந்த
கண் காது வாய் மூக்கு இன்னும் சில.
மிக்க சந்தோசம்
சிறு புழு அரித்து அழுகி மண்ணோடு மண்ணாக
எஞ்சிக் கிடக்கும்
என் மண்டை ஓடு
எண்ணம் ஏது?

ஒப்பனையில் அடங்காத என் மயிர் வேறு
ஓட்டுக்கழன்று மொத்தமாய் உதிர்ந்து
வெற்று ஓடு எனது.
பாரமே இல்லாத பஞ்சுக் கட்டி அது
ஒரு கோடி நிம்மதியுடன் கிடக்கிறது
உடலோடு ஒட்டி ஆடியது தான் மிச்சம்.

மாடும் மனிதனும் மிதித்து நொறுங்க
காலம் இன்னும் இருக்குமா?
நிலத்தில் வெள்ளமாம்
நான் நலைநது என் ஓட்டையெல்லாம்
மண் நிரம்புகிறது

-கதீர்- (நன்றி- எதுவரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## சமந்தாவுக்கு எதிராக ...

சமந்தாவுக்கு எதிராக செய்தி வெளியிடவில்லை – சமந்தா

லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் படம் அஞ்சான். விஜய்யின் தலைவா, அஜீத்தின் வீரம் படங்களைப்போன்று இப்படமும் மும்பையில் படமாக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்படத்தில் சமந்தாதான் நாயகி என்பது ஏற்கனவே முடிவாகி அவரும் படப்பிடிப்பில் கலந்து கொண்டு வருகிறார். ஆனால் இப்போது அப்படத்தில் இந்தி நடிகை ஒருவரும் இன்னொரு நாயகியாக நடிக்கயிருப்பதாக கூறப்படுகிறது.

இதன்காரணமாக, இப்படத்தில் நடிப்பதால் உற்சாகத்தில் இருந்து வந்த சமந்தா, இப்போது கடும் அதிருப்தி மனநிலையில் உள்ளாராம். இதனால் இந்த படத்தை விட அடுத்து ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தில் சமந்தாவின் ஆர்வம் திரும்பி நிற்கிறதாம்.

இந்த நிலையில், சினிமாவில் தனக்கு பிடிக்காத விசயங்கள் எங்கு நடந்தாலும் அதுபற்றி தனது டுவிட்டரில் சமந்தா கருத்து சொல்லி வரும் நிலையில், அஞ்சான் படத்தில் இன்னொரு நாயகி இருப்பது குறித்து சமந்தா தரப்பு அதிருப்தியான தகவலை வெளியிட்டுள்ளதாகவும் இணையதளங்களில் சூடான செய்திகள் உலவி வருகின்றன. அதில், பட நாயகன் சூர்யாவின் தலையீடு காரணமாக, சமந்தாவை ஓரங்கட்டிவிட்டு இந்தி நடிகையை இறக்குவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த அஞ்சான் டீம், சமந்தாவிடம் இதுபற்றி கேட்டபோது, எனக்கும்,



அதற்கும் சம்பந்தமில்லை. நான் தமிழ் சினிமாவுக்கு வருவதால் புகைச்சலில் இருக்கும் யாரோதான் இப்படி வதந்தி பரப்பி விட்டுள்ளனர் என்று கற்பூரத்தில் அடித்து சத்யம் செய்யாத குறையாக கூறிவருகிறாராம். அதோடு, இனி டுவிட்டரில் கருத்து பரிமாறுவதையும் நிறுத்தப்போகிறாராம் சமந்தா.

## அஜித் – சல்மான்

இந்தியில் ரீமேக் செய்யப்படுகிறது அஜித்தின் வீரம். சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடிப்பில் வெளியான படம் 'வீரம்'. இப்படம் பொங்கல் அன்று ரிலீஸ் ஆகி வெற்றியடைந்து வசூலிலும் சாதனை படைத்தது.



இதில் அஜித்துக்கு ஜோடியாக தமன்னா நடித்திருந்தார். தேவி ஸ்ரீபிரசாத் இசையமைத்திருந்தார். தற்போது வீரம் இந்தியில் ரீமேக் ஆகிறது. அஜித் நடித்த கதாபாத்திரத்தில் பாலிவுட் ஸ்டார் சல்மான் கான் நடிக்கிறார். இப்படத்தை இந்தியில் ரீமேக் செய்யும் உரிமையை பிரித்தி' நந்தி வாங்கியுள்ளார்.

தமன்னா நடித்த கதாபாத்திரத்தில் இந்தியில் ஜாக்குலின் பெர்னாண்டஸ் நடிக்கிறார். இவர்கள் மூவருடன் இணைந்து சிறுத்தை சிவா மும்பையில் உள்ள மெகபூப் ஸ்டுடியோவில் திரைக்கதையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்து ஆலோசனை செய்துள்ளார்.

## நடிகைகளின் பக்கம் திரும்பும் தேர்தல்



நடிகைகள் பக்கம் திரும்பும் இந்திய தேர்தல்

லோக்சபா தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் அரசியல் கட்சிகள் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு குறித்து தீவிரபேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. மறுபக்கம் பிரச்சாரத்திற்கு நட்சத்திர பட்டாளத்தை அழைத்து வர திட்டமிடப்படுகிறது. இந்நிலையில் நடிகைகளுக்கு தான் படுகிராக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக நடிகை நமீதாவை தங்கள் கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ய வைக்கும் முயற்சியில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளனவாம்.

மார்க்கெட் இல்லாத நமீதா அரசியலில் குதிக்கப் போவதாக தெரிவித்தார். தான் எந்த கட்சியில் சேருவேன் என்பதை அடுத்த மாதம் அறிவிப்பேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நமீதா குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால் அம்மாநில முதல்வரும், பாஜக பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடி இருக்கும் கட்சியில் சேர்வார் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் அவர் திமுகவில் சேரப் போவதாகவும் பேசப்படுகிறது. வரும் லோக்சபா தேர்தலில் தங்கள் கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யுமாறு நமீதாவிடம் அதிமுக சார்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறதாம்.

நமீதாவுக்கு கோலிவுட்டில் மவுசு இல்லாவிட்டாலும் அரசியல் கட்சிகளிடையே படுகிராக்கியாக உள்ளது. அவர் எந்த கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். நமீதா தவிர சிம்ரன் மற்றும் அண்மையில் மார்க்கெட் இழந்த நடிகைகளையும் தங்கள் கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ய வைக்க அதிமுக திட்டமிட்டுள்ளதாம்.

## கட்டிப்பிடி வைத்தியம்

2005ல் சூப்பர் என்ற தெலுங்கு படத்தில் அறிமுகமானவர் அனுஷ்கா. ஆனபோதும், குறுகிய காலத்திலேயே தெலுங்கு பேச பயிற்சி எடுத்து விட்ட அனுஷ்கா, தற்போது சூப்பராக தெலுங்கு பேசுகிறார். அதோடு ஐதராபாத்தில் செட்டிலாகி தன்னை தெலுங்குக்காரர் போலவே வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார்.

தமிழில் மாதவன் நடித்த ரெண்டு படத்தில் என்ட்ரி கொடுத்த அனுஷ்கா, அருந்ததி படம் மூலம் தெலுங்கைப்போலவே தமிழிலும் அதிரடியாக பேசப்பட்டதால், அதையடுத்து தமிழ், தெலுங்கு என இரு மொழி நடிகையாகி விட்டார். மேலும், முன்பெல்லாம் தன்னை சினிமா சம்பந்தமாக யார் சந்திக்க வந்தாலும் கையெடுத்து கும்பிட்டபடி வரவேற்பார் அனுஷ்கா.

ஆனால், சமீபகாலமாக, அதிலிருநது மாறி, அடிக்கடி சந்திக்கும் நபர்களாக இருந்தால், கட்டிப்பிடித்து வரவேற்கிறார். குறிப்பாக, படப்பிடிப்பு தளத்துக்கு வந்ததும், ஹீரோக்களை அப்படித்தான் வரவேற்கிறாராம் அனுஷ்கா. ஆனால், டைரக்டர்களை படப்பிடிப்பு முடிந்து வீட்டிற்கு செல்லும்போது கட்டிப்பிடித்து பிரியா விடை கொடுக்கிறாராம். இதனால் அனுஷ்காவுக்கு நாளுக்குநாள் அபிமானிகள் பெருகிக்கொண்டு வருகிறார்களாம்.

இதைப்பார்த்து, ஆந்திராவிலுள்ள மேலும் சில நடிகைகளும் இப்போது அனுஷ்காவின் பாணியை கடைபிடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆக, போகிற போக்கைபார்த்தால், அனுஷ்கா ஆரம்பித்து வைத்த இந்த கட்டிப்பிடி கலாசாரம் விரைவில் கோடம்பாக்கத்திலும் பரவி விடும் போல் தெரிகிறது.

## மௌனிகாவால் பரபரப்பு

பாலுமகேந்திராவின், ''வண்ண வண்ண பூக்கள்'' படத்தால் அறிமுகப்படுத்தப்பட்டவர் நடிகை மவுனிகா. அதனைத் தொடர்ந்து பல்வேறு படங்களில் நடித்துள்ளார்.

அந்தப்படத்தில் இருந்தே பாலுமகேந்திராவுக்கு பிடித்தமான நடிகையாக மாறினார் மவுனிகா. அதன்பிறகு பாலுமகேந்திரா கதை நேரம் என்று டி.வி. சீரியல் எடுத்தபோது மவுனிகாவே அதில் பிரதான நாயகியாக நடித்தார். மேலும் மவுனிகாவின் குடும்ப நண்பராகவும் பாலுமகேந்திரா இருந்து வந்தார் என்றும், இதனால் பாலுமகேந்திராவின் குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## கரகாட்டத்தில் களமிறங்கும் ஸ்ரேயா



பரதேசி படத்திற்கு பிறகு பாலா டைரக்ட் செய்யப்போகும் படம் கரகாட்டக் கலை தொடர்பானது. சினிமா வருவதற்கு முன்பு மக்களை சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்த கரகாட்டக் கலையின் இன்றைய நிலையை காட்டும் படமாக பாலா இதனை உருவாக்க இருக்கிறார்.

இளையராஜா இசையில் 6 பாடல்களை வாங்கி விட்டார். ஒளிப்பதிவாளர் செழியன் 5டி டிஜிட்டல் கேமராவை எடுத்துக் கொண்டு கரகாட்ட கலைஞர்கள் அதிகமாக வாழும், தஞ்சாவூர், சேலம், மதுரை, புதுக்கோட்டை பகுதிக்கு சென்று அவர்களின் நிஜ வாழ்க்கையை படம்பிடித்து வருகிறார். இதில் இன்னொரு சிறப்பு வரப்போகிறது. அது முதன் முதலாக சசிகுமார் தாடி இல்லாமல் மொழு மொழு முகத்துடன் நீண்ட தலைமுடியுடனும் நடிக்க இருக்கிறார்.

அவருக்கு ஜோடியாக ஸ்ரேயா நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இதற்காக ஸ்ரேயாவிற்கு கரகாட்டம் சொல்லிக் கொடுப்பதற்காக கலைமாமணி விருது பெற்ற கரகாட்ட கலைஞர் ஒருவரை ஏற்பாடு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே முறைப்படி ஸ்ரேயா நடனம் கற்றவர் என்பதால் வெகு எளிதான கரகாட்டத்தை கற்றுக் கொள்வார் என்கிறார்கள்.

## பனியிலும் வெட்டி வீழ்த்துகிறார்

பொதுவாக நடிகர்கள் எந்த மாதிரியான சீதோஷ்னம் என்றாலும் இறங்கி நடிப்பார்கள். ஆனால் நடிகைகளைப்பொறுத்தவரை கடும் வெயிலோ, மழையோ, குளிரோ இருந்தால் தங்கியிருக்கும் ஸ்டார் ஹோட்டலை விட்டு வெளியே தலைகாட்ட மாட்டார்கள்.

அதனால் டோட்டல் யூனிட்டே ஸ்பாட்டில் காத்திருக்க, உதவி இயக்குனர்கள் நடிகைகளை களத்திற்கு அழைத்து செல்வதற்குள் படாதபாடு பட்டுக்கொண்டிருப்பார்கள்.



ஆனால், எஸ்.பி.ஜனநாதனின் புறம்போக்கு படத்தில் நடிக்கும் கார்த்திகா, இதற்கு நேர்மாறாக இருக்கிறாராம். குலுமணாலியில் நடந்த அப்படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பின்போது, கொட்டும் பனியிலும் நடித்தாராம். பனி ஓவரா இருக்கே கொஞ்சம் குறைந்த பிறகு கேமராவை ஆன் பண்ணலாமா? என்று டைரக்டர் பின்வாங்கினாலும், ஆர்யா, விஜயசேதுபதி இருவரும் நடிக்க தயாராக நிற்பதைப்பார்த்து கார்த்திகாவும் களத்தில் இறங்கி வரிந்து கட்டி நின்றாராம். இதுபற்றி கார்த்திகா விடுத்துள்ள செய்தியில்,

குலுமணாலியில் படப்பிடிப்பு என்றதும், குளிர் அதிகமாக இருக்கும் என்பது எனக்கு தெரியும். அதனால், எந்த குளிரையும் தாங்கிக்கொண்டு நடிப்பதற்கு முன்பே என்னை தயார்படுத்திக்கொண்டுதான் சென்றேன்.

அதோடு, இந்த படத்தில் எனக்கு சேலஞ்சிங்கான வேடம் என்பதால், அதில் பெரிய அளவில் ஸ்கோர் பண்ண வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே எனது மனதுக்குள் இருந்து கொண்டிருப்பதால், பனியைக்கண்டு துளியும் பயமில்லாமல் நடித்தேன் என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெனுஸாவின் மரணவாக்குமூலம் "I love my Family"



ஆண்மையில் குருணாகல் பிரதேசத்தில் தற்கொலை செய்து கொண்ட வெனுசா ஃபேஸ்புக் சமூக வலைத்தளத்தால் கொல்லப்பட்டதாகவே செய்தி எழுந்தது. அனைத்து ஊடகங்களிலும் எழுதப்பட்ட செய்தியின் பின்னணி என்ன?

மிகவும் அழகான ஆகர்சிக்கும் 16 வயதுடைய வெனுஸா தனது தனிப்பட்ட ஃபேஸ்புக்கில் வெளியிட்டிருந்த படங்களால் தண்டிக்கப்பட்டாள்.

'இதைத்தான் அழுதழுது எனது மகள் என்னிடம் கூறினாள்'. தனது அழுகையின் ஊடாக வெனுஸாவின் தாய் இதனை வெளிப்படுத்தினார்.

குருநாகலை சேர் ஜோன் கொத்தலாவல மகாவித்தியாலய மாணவியான வெனுஸா எப்போதும் போலவே அன்றும் தன்னுடைய பாடசாலைக்கு பயணமானாள். ஆனால் மாலை வேளை அவள் பாடசாலையிலிருந்து திரும்பும் போது முற்றிலும் மாறுபட்டவளாக வந்தாள் ...

அழுதிருந்த அவளின் நிலையைக் கண்ணுற்ற பெற்றோர் அவளை துருவத் தொடங்க ....

அவள் அன்று பாடசாலையில் நடந்தவற்றை கூறத் தொடங்கினாள்...

பாடசாலைக்கு அன்று வருகை தந்திருந்த வினுஸா தொடர்பாக அதற்கும் முதல்நாள் மாலை முறைப்பாட்டுப் பெட்டியிலே கடிதம் ஒன்று கிடந்துள்ளது. அக் கடிதத்தில் வெனுஸா இரண்டு ஃபேஸ்புக் கணக்குகளை வைத்திருப்பதாகவும் அவற்றுள் ஒன்றில் கௌரவக் குறைச்சலான படங்கள் இடப்பட்டிருப்பதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அம்முறைப்பாட்டை அடுத்து அதனை அப்பாடசாலையின் இராணுவப் பயிற்சி பெற்ற அதிபர் விசாரிக்கத் தொடங்கியுள்ளார்.

தனது விசாரணை தொடர்பாக அவர் வினுஸாவின் மரணவிசாரணையின் போது தெரிவித்தவை " நான் மிகவும் ஒழுக்கத்தை பின்பற்றும் ஒருவன். அதனையே எனது பாடசாலையிலும் நான் பின்பற்றுகின்றேன். நான் அதிபராக இப் பாடசாலைக்குப் பணி நியமிக்கப்பட்ட போது இப் பாடசாலையின் மாணவர்கள் கடும் ஒழுங்கீனங்களுக்கு உட்பட்டிருந்தனர்.

அவ் ஒழுங்கீனங்களை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் முழு ஒத்துழைப்புடன் இல்லாதொழித்தேன். அன்றும் வெனுஸா தொடர்பான குற்றச்சாட்டை விசாரிக்கும் முடிவுடன் ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் மற்றும் பிரதி அதிபர் முன்னிலையில் அவரை எனது அலுவலகத்தில் வைத்தே விசாரித்தேன். அவ் விசாரணையில் வெனுஸா தனது தவறை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவரது பெற்றோரை மறுநாள் அழைத்துவரும்படி பணித்தேன்'' என தெரிவித்துள்ளார்.

" அனைத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முன்நிலையில் அதிபர் என்னை இழிவுபடுத்தினார். என்னால் பாடசாலைக்குப் போக முடியாது...என்னால் இனி வாழ முடியாது.... ஆகவே நான் என் வாழ்வை முடித்துக் கொள்கின்றேன்" என்பதே வெனுஸாவின் இறுதி எழுத்துக்களாக இருக்கின்றது.

சிங்களத்தில் எழுதப்பட்டு தமிழில் எம் ரிஷான் ஷெரீப் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அச் சிறுமியின் இறுதி மரண வாக்குமூலம்....

2014 -02-05

அப்பாவுக்கு..

இப்படி ஒரு முடிவெடுத்ததற்காக என்னை மன்னியுங்கள். நான் குற்றமெதுவும் செய்யாமல் எனது அப்பாவை, அதிபர் முன் நிற்க வைக்க என்னால் முடியாது. தவறு என்று நான் செய்ததென்றால் 7 ஆம் ஆண்டில் ஃபோட்டோ எடுத்ததுதான். நான் செய்த அந்தத் தவறை மட்டும் ஏற்றுக் கொள்கிறேன். ஃபோட்டோ ஒன்றை FB யில் இட்டவரையும், அந்த ஃபோட்டோவை எனக்கு டேக் செய்தவரையும் விட்டுவிட்டு ஏன் என்னை நோக்கியே விரலை நீட்டு கிறார்கள்?

இன்று நான் என்னுடைய ஒன்று மறியாத அப்பாவை பாடசாலைக்குக் கூட்டிச் சென்றிருந்தால் அதிபருடைய ஏச்சுப் பேச்சுக்களை எவ்வளவு கேட்டிருக்க வேண்டியிருந்திருக்கும்? என்னுடைய அப்பா அவ்வாறான ஏச்சுப் பேச்சுக்கு ஆளாகக் கூடாது. எவ்வளவு பிரச்சினைகளை அப்பா தலையில் வைத்திருக்கிறீர்கள் என இந்த வீட்டில் யாருக்குமே புரிவதில்லை. அதற்கிடையில் எங்கேயோ போகும் ஒன்றுக்காக எனது அப்பர்வை அவமானப்படுத்த வேண்டிய தேவை எனக்கில்லை. இதற்கெல்லாம்



காரணம் எமது அதிபர். அவர் எதுவுமே தெரியாமல் என்னை நோக்கி மாத்திரம் விரலை நீட்டுவது ஏன் என எனக்குத் தெரியவில்லை. 5000 பிள்ளைகள் முன்பு, கூட்டத்தில் வைத்து மேடைக்கு அழைத்துத் திட்டினார். ஒரு பையனோடு படம் பார்க்கப் போனாய் எனச் சத்தமிட்டார். நான் போகவில்லை என்பதை எனது தங்கையும், அக்காவும் அறிவார்கள். இவ்வளவு அநீதங்களெல்லாம் நடந்த போதும் கூட நான் மிகவும் பொறுமையாக இருந்தேன். இனிமேலும் என்னால் இயலாது.

எனது வகுப்பாசிரியர் பண்டார, வகுப்பைப் பொறுப்பேற்கும் அன்று எனது எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு ஆசிரியருக்கு உதவினேன். அப்படியெல்லாம் செய்த என் மீது வீண் பழி சுமத்துகிறார்கள். இந்தப் பாடசாலைக்காக பாடுபடுவதுதான் எனது மிகப் பெரும் தவறு. பாடசாலையில் ஏதேனும் போட்டிகள், விழாக்களின் போது நான் நடனமாடாமல்' இருந்தால்தான் ஆச்சரியமாக இருக்கும். ஜயசுந்தர ஆசிரியை, ரஞ்சனி ஆசிரியை ஆகியோருக்கு இது தெரியும். எனது அப்பாவுக்கும், பண்டார ஆசிரியருக்கும் இனியும் கவலைகள் தர என்னால் முடியாது. நான் இன்று செய்யப் போகும் காரியத்தால் ஏனைய பிள்ளைகளுக்கு இம் மாதிரியான கீழ்த்தரமான வேலைகள் நடக்காமலிருக்கும் என எனக்குத் தோன்றுகிறது.

சில ஆசிரியர்கள் பிரச்சினையொன்று வரும்போது எனது குடும்பத்தை இழுக்கிறார்கள். நான் இங்கு சொல்வது யார் குறித்து என்பது என் அப்பாவுக்குத் தெரியும். நான் இன்னும் உயிருடன் இருந்து, இந்தப் பாடசாலையில் "வேசி" எனப் பேச்சுக் கேட்டுக் கேட்டு ழு.ஃ.டு பரீட்சையைக் கூட என்னால் ஒழுங்காக எழுத முடியாது. அப்பாவிப் பிள்ளைகள் சிறியதொரு தவறைச் செய்தால் அப் பிள்ளைகளை "வேசி" எனக் கூப்பிடுவதை நிறுத்துங்கள். பிள்ளைகள் பற்றி முறைப்பாடுகள் வரும்போது யார் சரி, யார் தவறு என்பதைத் தேடிப் பாருங்கள். எல்லா அவப் பெயர்களையும் எனக்கும், என் தங்கைக்குமே கூறுகிறார்கள். எனது பாடசாலையில் 50%மானவர்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அவையெல்லாம் அதிபருக்குத் தெரியாது. நாங்கள் சொல்வதும் இல்லை. அதனால்தான் எம்மையே குற்றம் சாட்டுகிறார்கள்.

விளையாட்டுப் பையன்

நான் எனது அப்பாவை மிகவும் நேசிக்கிறேன். எவருடைய முன்பும் நின்று "எனது மகள் செய்த தவறுகளுக்கு மன்னித்துக் கொள்ளுங்கள்" என அவர் மன்றாடுவதை நான் விரும்பவில்லை. என்னை பாடசாலையிலிருந்து விலக்கிவிடும்படி அதிபர் கூறவிருக்கிறார். நாங்கள் நல்லதை மாத்திரமே செய்தபோதும், போட்டிகளிலெல்லாம் வென்றபோதும் எமக்கு நற்பெயரெதுவும் சூடவில்லை. ஆனால் தவறொன்று செய்தவிடத்து முழுப் பாடசாலைக்கும் கேட்கும் வண்ணம் சத்தமிடத்தான் அவருக்குத் தெரியும். பாடசாலைக்கே நான் ஒரு இழுக்கு என அவர் கூறுகிறார். இவ்வாறெல்லாம் ஏச்சுக் கேட்டுக் கேட்டு என்னால் பாடசாலைக்குப் போக முடியாது. கமகே ஆசிரியரும் கூட நான் நடத்தை கெட்ட பிள்ளை எனக் கூறினார். நான் அப்பொழுதெல்லாம் கூட எனது ழு.ஃ.டு பரீட்சைப் பெறுபேறுகளின் மூலம் எனது நல்ல நடத்தையை அவர்களுக்குக் காட்டத் தீர்மானித்துக் காத்திருந்தேன். எனினும் இப்பொழுது அதிகம் தாமதமாகி விட்டது. இனி செய்ய ஏதுமில்லை.

பண்டார ஆசிரியர், நடன ஆசிரியைகள் இருவர், பிரபா ஆசிரியை ஆகியோர் மாத்திரமே இந்தப் பாடசாலையில் எனது திறமைகளைப் பற்றிக் கூறிப் பாராட்டியவர்கள். பிரபா ஆசிரியையிடம் சென்று எனது பிரச்சினைகளைக் கூறி ஆறுதல் தேடியபோது, நான் நன்றாக பரீட்சையில் சித்தியெய்த வேண்டுமென எண்ணியிருந்தேன். ஆனால் என் கனவுகள் எல்லாம் அழிந்து போயின. என்னால் இப்பொழுது ழு.ஃ.டு பரீட்சை தவிர்த்து அடுத்த ஜென்மத்தில் எந்த இடம் கிடைக்குமெனக் கூட எண்ணிப் பார்க்க இயலவில்லை.

அப்பா, நீங்கள் என்னுடைய பேரில் இருக்கும் காணியை உங்கள் பெயருக்கு மாற்றிக் கொள்ளுங்கள். நானில்லாமல் போனால் உங்களைக் கவனித்துக் கொள்ள ஆளிருந்தால் அது ஆச்சரியம்தான். உங்களிடம் பணம் இருப்பதால்தான் உங்களுடன் இருப்பவர்களெல்லாம் கூட இருக்கிறார்கள். பணம் இல்லாமல் போன நாளில் உங்களுடன் யாரும் இருக்க மாட்டார்கள். அவ்வாறு நடக்க இடமளிக்கக் கூடாது. இறுதியான, இறுதியான இந்தக் கணத்திலும் கூட எனக்குத் தென்படுவதெல்லாம் எனது அப்பாவின் கண்களிரண்டும் மாத்திரமே. எனக்கு உங்களை விட்டுப் போவது மிகுந்த கவலையைத் தருகிறது. முடியுமென்றால் தங்கையையும் அந்தப் பாடசாலையிலிருந்து நீக்கி விடுங்கள். அந்த அதிபர் இருக்கும்வரை தங்கைக்கும் பாரபட்சம் காட்டுவார்.

அம்மா, நான் உங்களையும் மிகவும் நேசிக்கிறேன். அம்மா என்னுடன் இன்று இன்னும் கதைக்காததற்குப் பரவாயில்லை. சந்தோ'மாக இருங்கள். என்னுடைய அக்காவைத்தான் இந்த இறுதி நேரத்திலும் பார்த்துக் கொள்ள முடியவில்லை. நீங்களும் இருக்கும் இடத்தில் சந்தோ'மாக இருங்கள். என்னுடைய அப்பாவை கவனித்துக் கொள்ளுங்கள். தங்கையே அவர் பாரிய நெருப்புக்கிடையே வெந்துகொண்டிருக்கிறார்.

நானில்லாமல் போனால் உங்களுடைய பிரச்சினைகளை யாரிடம் கூறுவீர்கள் அப்பா? எழுத எழுத எனக்கு எனது இதயத்தில் கவலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அடுத்த ஜென்மத்திலும் கூட ஆறுதல் கிடைக்காமல் போகும். என்னைப் போல தவறிழைக்காத பிள்ளைகள் இன்னும் இருப்பார்கள். அவர்களையும் பாடசாலையிலிருந்து விலக்கி விடப் பார்ப்பார்கள். அவர்களுக்காகவே நான் இத் தீர்மானத்தை எடுத்தேன்.

***I love my family***

நான் எனது குடும்பத்தை நேசிக்கிறேன்.

இங்கு என்னைப் பார்த்தவுடன், பண்டார ஆசிரியருக்கு முதலில் தெரிவியுங்கள்."

எது எப்படியாயிருப்பினும் ஒரு 15 வயது இளம் பெண்ணின் வாழ்வு முடிந்துபோனது
யாரை நோவது.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலையின் விளையாட்டு விழா



வின்செண்ட் தேசிய பாடசாலையின் வருடாந்த வீளையாட்டு போட்டியின் பாிசளிப்பு விழா பாட்சாலையின் அதிபர் திருமதி. ஆர் கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. அவ் ஆரம்ப நிகழ்வு காந்திப் பூங்காவில் ஆரம்பமானது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி கலந்து கொண்டு வெற்றி பெற்ற இல்லங்களுக்கு பரிசுக் கேடயங்களை வழங்கி வைத்தார்

(வரதன்)





## 40:40 துடுப்பாட்டப்போட்டி

கல்முனையில் 40:40 துடுப்பாட்டப் போட்டியொன்று நடந்தேறியுள்ளது. கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகமும் நிந்தவூர் லகான் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்ட இப் போட்டி 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட இரு கட்டங்களாக நடாத்தப்பட்டது.

இப்போட்டியில் லெஜென்ஸ் கழகம் 30 ஓட்டங்கள் கூடியதாகப் பெற்று வெற்றியீட்டியது. சிறப்பாட்டக்காரராக லெஜென்ஸ் கழகத்தின் மனாசீர் தெரிவு செய்யப்பட்டார்.

## இவர்களும் சூதாட்டத்திலா?

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட நீதிபதி முகுல் முட்கல், மேலதிக சொலிசிடர் ஜெனரல் என்.நாகேஸ்வர்ராவ், அசாம் கிரிக்கெட் சங்க நிர்வாகி சட்டத்தரணி நிலே தத்தா ஆகியோர் கொண்ட குழு, உச்ச நீதிமன்றில் நேற்று முன்தினம் 170 பக்கங்களை கொண்ட அறிக்கையை தாக்கல் செய்தது. அவ்வறிக்கையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி, சுரேஸ ரெய்னா ஆகியோருக்கும் போட்டி நிர்ணய சதி மற்றும் சூதாட்டத்தில் தொடர்பு உண்டு என்று கைது செய்யப்பட்ட சூதாட்ட தரகர் உத்தம் ஜெயின் என்ற கிட்டி, திருச்சி ரயில்வே காவல்துறை அதிகாரி ஜி.சம்பத்குமார் நடத்திய விசாரணையின் போது கூறியதாக அக் காவல்துறை அதிகாரி தங்களிடம் தெரிவித்ததாக குழு அறிக்கையிட்டுள்ளது..

## ஆடுகளத்தைப் பார்க்கும் போது இந்திய அணி சந்தோசப்படாது

இரண்டாவது ஐந்து நாள் போட்டிக்கான ஆடுகளத்தைப் பார்க்கும் இந்திய அணிக்கு பெரும் சந்தோசம் கிடைக்காது என ஆடுகள முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான இரண்டாவது ஐந்த நாள் துடுப்பாட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ள நிலையில் இக்கருத்தை ஆடுகள முகாமையாளார் தெரிவித்துள்ளார். " நாங்கள் இவ் ஆடுகளத்தை மேற்கிந்தியத் தீவுகளுடன் விளையாடி வெற்றிபெற்ற ஆடுகளம் போலவே உருவாக்கியுள்ளோம். வேகப்பந்தாளர்களுக்கே ஆடுகள்ம் உதவி செய்யும் என்பதுடன் நாட்கள் செல்லும் போது ஆடுகளப் புற்கள் மெல்லியதாக மாறும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# விளையாட்டு முரசு

# IPL

## 70 வீரர்களின் மொத்த விலை 212.35 இந்தியக் கோடிகள்

இந்தியன் பிறீமியர் லீக் துடுப்பாட்டப் போட்டிகளில் விளையாட்டு வீரர்களை ஏலத்தில் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் 12ம் திகதி ஆரம்பமானது.

### அதிகூடிய விலைபோன இந்திய வீரர்கள்

இவ் ஏலத்தின் போது அதிகூடிய விலைக்கு வாங்கப்பட்ட இந்திய வீரர்களின் வரிசையில் முதலிடத்தில் இருப்பவர் யுவராஜ்சிங் ஆகும். இவர் 14 கோடி இந்திய ரூபாய்களுக்கு றோயல் சலஞ்சர்ச் அணியால் கொள்வனவு செய்யப்பட, மற்றைய இந்திய வீரரான தினேஸ் கார்த்திக் 12.5 கோடி ரூபாய்களுக்கு டெல்லி டெயர்டெவில்ஸ் அணியினலார் கொள்வனவு செய்யப்பட்டார்.





### அதிகூடிய விலை போன வெளிநாட்டு வீரர்கள்



இம்முதல்நாள் ஏலத்தில் அதிகூடிய விலைக்கு விற்கப்பட்ட வெளிநாட்டு வீரராக ஆஸியின் அதிவேகப் பந்து வீச்சாளர் மிச்சேல் ஜோன்சன் பதிவானார். இவர் 6.5 கோடி ரூபாய்களுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியினரால் கொள்வனவு செய்யப்பட இங்கிலாந்தின் கவர்ச்சி ஆட்டக்காரர் கெவின் பீட்டர்சன் மற்றும் மக்ஸ்வெல் ஆகியோர் 6 கோடி ரூபாய்களுக்கு விலை போயினர்.



### முதல்நாளில் விலைபோகாத இலங்கை வீரர்கள் வீரர்கள்

ஐ.பி.எல் லின் முதல் நாள் ஏலத்தில் எந்தவொரு இலங்கை வீரரும் விலை போகவில்லை. மகேல ஜெயவர்தன, குசால் பெரேரா, அன்ஜலோ மத்தியூஸ், திலகரத்ன டில்சான், பிரசன்ன ஜெயவர்த்தன, ரஜ்ஜண ஹேரத், அகில தனஞ்சய, லாஹிரு திரிமன்ன, ஜீவன் மெண்டிஸ்,நுவன் பிரதீப், சுரங்க லக்மல், இசுறு உதன ஆகிய இலங்கை வீரர்களின் பெயர்கள் ஏலப் பட்டியலில் இருப்பது குறிப்பிடத் தக்கது.

## திருமலை புனித மரியாள் கல்லூரியின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி



புனித மரியாள் கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவிகளின் இல்ல விளையாட்டுப்போட்டி 13.02.2014 அன்று காலை 8.00 மணிக்கு பாடசாலை அதிபர் அருட்சபோதரி நிரோசா தலைமையில் பாடசாலை வலைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

காலை 8.00மணி முதல் 9.00 மணிவரை தரம் 1-2 மாணவிகளுக்கான போட்டிகள் நடைபெற்று பரிசில்கள் வழங்கியதைத் தொடர்ந்து, தரம் 3-5 வரையான மாணவிகளுக்கான நிகழ்வுகள் நடைபெற்றன.

இதற்கு பிரதம அதிதியாக லண்டனின் பிரதான கணக்காளரான திருமதி. திரீஸ் கொயெக் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், அருட்சகோதரிகள் மற்றும் பெற்றோர்களும் மாணவிகளின் விளையாட்டுகளுக்கு உற்சாகமூட்ட வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்தும் இல்லாத நிலை ஸ்ரீலங்காவின் மனித உரிமைகள்

ஜெனீவாவில் இருக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவிருக்கின்ற குழுவினர்தாம் அதன் தூதுவர்கள் எனக் கூறப்படும் ளுிநஉயைட சுயிீழசவநரசள ஆவார்கள். சுயிீழசவநரசள என்பது ஒரு பிரெஞ்சுப் பதமாகும். விவாதித்துத் தீர்மானம் எடுக்கும் ஓர் அமைப்பிற்குத் தேவையான தகவல்களை அறிக்கை செய்பவர்கள் என இது பொருள்படும். உலகத்தில் சமாதானத்தைப் பேணும் அமைப்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டபொழுது அதன் செயற்பாடுகளை "ஆராய்தல், கண்காணித்தல், ஆலோசனை கூறுதல், பகிரங்கமாக தெரியப்படுத்துதல்" என வகை பிரித்தார்கள். பிரச்சினை ஏற்படும் பட்சதில் அதனைத் தீர்ப்பதற்கு உதவும் கருவிகளே இவை. இந்தப் பணியைச் செய்வதற்காக ஐ.நா ஸ்தாபனம் சயிீழசவநரசள என அழைக்கப்படும் இந்த விசேட தூதுவாகளை நியமிக்கின்றது. ஒவ்வொரு தூதுவரும் ஒரு விடயம் குறித்தோ அல்லது குறிப்பிட்ட நாட்டில் நிலைமைகள் குறித்தோ மனித உரிமைகள் ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டப்படுகின்றனர். சமிபத்தில் காணாமற் போனொருக்கான விசேட தூதுவர் இலங்கைக்கு வந்திருந்ததை நாம் அறிவோம். ராதிகா குமாரசுவாமி அவர்கள் பெண்கள் மீதான வன்முறை தொடர்பான விசேட தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தவர். இத்தூதுவர்கள் கொடுக்கின்ற அறிக்கைகளை வைத்துக் கொண்டும் தான் நேரடியாகச் சென்று அறியும் விடயங்களை வைத்தக்கொண்டுமே ஆணையாளர் மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு நாட்டைக் குறித்த தனது சிபாரிசுகளை சமர்ப்பிக்கின்றார். இவருடைய அறிக்கையின் அடிப்படையில்தான் அங்கு அங்கத்துவ நாடுகளினால் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.

கடந்த வாரம் ஒன்று கூடுதலுக்கான உரிமை மற்றும் அமைப்பாக இயங்கும் உரிமை ஆகிய அடிப்படை மனித உரிமைகளுக்கு பொறுப்பாகவிருக்கும் திரு மைனா கியாய் என்பவர் தனது பணிகள் தொடர்பாக ஆசிய நாடுகளில் செயற்படும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். ஜனநாயகத்துக்கான உலக இயக்க்த்தினரால் சிங்கப்பூரில் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்புக்கு சீனா, மொங்கோலியா, வியட்நாம், லாவோஸ், தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, மியன்மார், நேபாளம், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்தெல்லாம் பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர். சிங்கப்பூரிலிருந்தும் பல செயல்வாதிகள் கலந்துகொண்டிருந்தனர். இந்நாடுகளில் ஒன்று கூடும் உரிமையை மீறும் அரசின் செயற்பாடுகளை திரு கியாயின் அறிக்கைகளில் பிரதிபலிக்க வைப்பதே இச்சந்திப்பின் நோக்கமாக இருந்தது. அதற்காகப் பொதுக் கலந்துரையாடல்களும் குழு ரீதியான கலந்துரையாடல்களுமாக இது வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் மைனா கியாய் அவர்கள் தனது பணி நோக்கு பற்றியும் பணிகளைப் பற்றியும் கூறிய விளக்கங்கள் எம்மில் பலருக்கு புதிதாகத்தானிருந்தது. விசேட தூதுவர்களாக வருபவர்கள் தொண்டரடிப்படையில்தான் பணி புரிகிறார்கள் என்பதையும் இது அவருடைய முழு நேர பணியும் அல்ல என்பதையும் நாம் அங்கு தெரிந்து கொண்டோம். தனது நாடாகிய கென்யாவில் சமூக செயல்வாதியாக செயற்பட்ட அனுபவம் கொண்டவர் கியாய். 2011ம் ஆண்டு முதல் விசேட தூதுவராக நியமிக்கப்பட்ட தன்மையினால் பிற நாடுகளுக்குச் சென்ற தனது அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்து கொண்டார். மக்களை அமைப்பாக செயற்படாமல் தடுப்பது, அவர்களை ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கலந்து கொள்ள விடாமல் தடுப்பது போன்ற நடவடிக்கைகளில் கிட்டத்தட்ட சகல அரசுகளும் ஈடுபடுகின்றன என்பதை நாம் இவருடைய அனுபவங்களினூடாக அறியக் கூடியதாக இருந்தது. அவற்றின் அதிகாரத்துக்கு இவையெல்லாம் சாவுமணி அடிப்பது போலல்லவோ? உதாரணமாக ருவாண்டாவில் எந்த அமைப்பும் தனது வருடாந்த நிதிகளில் பத்து வீதத்தினை மட்டுமே வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து பெறலாம் என்கின்ற சட்டம் இருக்கின்றது. ஒரு வறிய நாட்டில் செயற்படும் அமைப்பு உள்ளூரில் நிதிகள் சேகரிப்பது எவ்வாறு சாத்தியப்படும்? இந்தவொரு சட்டத்தின் மூலமேயே சிவில் சமூக அமைப்பக்களின் செயற்பாடுகளை ஒரேயடியாக முறியடித்து விடலாம். சிங்கப்பூரில் ஒரேயொரு இடத்தில் மட்டுமே மக்கள் கூடி நிற்க அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அ்நத இடத்திலோ அங்கு கூடுபவர்களைக் கண்காணிக்கும் பொருட்டு சுற்றிவர கமராக்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றனவாம். சீனாவில் யாராவது ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்துவதற்கான அனுமதியைக் கோரி காவல் துறையினருக்கு விண்ணபித்தால், அதற்கு அனுமதி கிடைக்கின்றதோ இல்லையோ, உடனேயே அவருடைய தேசிய அடையாள அட்டை மஞ்சள் வண்ணமாக கணனியில் மாற்றப்படும். இது கிட்டத்தட்ட பச்சை குற்றிக் கொள்வது போலாகும். இவர் எங்கு சென்றாலும், எந்த உல்லாச விடுதியில் தங்க நேர்ந்தாலும் தனது அடையாள அட்டையைக்கொண்டுதான் பதிவு செய்ய வேண்டும். அதனைக் கணனியில் பதிவ செய்யும்பொழுதே மஞ்சள் நிறம் தெரிந்து விட்டால் அவரைத் தங்க விடாமல் செய்கின்ற விடுதிகளும் அவருக்கு தேவையான சேவைகளை வழங்கா நிறுவனங்களும் இருக்கின்றனவாம். அரசுக்கு எதிராக செயற்படுபவர்களை தாம் அனுசரித்து நடந்தால் அரசின் கோபத்துக்கு ஆளாகவேண்டுமே என்கின்ற பயம் யாருக்குத்தானில்லை?

நாம் குழு வேலைகளில் இறங்கி எமது நாடுகளின் நிலைமைகளைப் பற்றி ஆராய்ந்தபோதுதான் எமது கலந்துரையாடல்கள் மிக சுவாரசியமாகத் திரும்பின. சுகல நாடுகளிலுமிருந்து பல பிரச்சினைகள் வெளிக்கொணரப்பட்டாலும், ஸ்ரீலங்காப் பிரச்சினை அதிவிசே'ம் தான் என எல்லோரும் ஒப்பக்கொண்டார்கள். இங்கிருந்து போன எங்களுக்கும் இவ்வளவு மோசமான ஊரில் நாம் வாழ்கின்றோமா என்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது. எங்கள் நாட்டின் விசே'ம் என்னவெனில், உரிமைகள் இருக்கின்றனதாம், ஆனால் அவை இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, எமது அரசியலமைப்புச் சட்டத்தில் உறுப்புரைகள் 12 முதல் 14 வரை அடிப்படை மனித உரிமைகள் யாவும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உறுப்புரை 15ல் தேசியப்பாதுகாப்பு நிமித்தம் இவை மட்டுப்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுவும் போதாமல், உறுப்புரை 16ல், இலங்கையில் 1978க்கு மன்போ அல்லது பிறகோ வேறு ஏதாவது சட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தால், அவை அடிப்படை மனித உரிமைகள் கொள்கைகளுக்கு முரணாக அமைந்திருந்தால, அடிப்படை மனித உரிமைகளன்றி அச்சட்டங்களே செல்லுபடியாகும் என வரையப்பட்டிருக்கின்றது. பதினாறு வயதினிலே ரஜனிகாந்தின் பன்ச் டயலொக்கில் சொல்லப் போனால் "இது எப்படியிருக்கு?" எத்தனை நாடுகளுக்குப் போயிருக்கின்றேன் ஆனால் நான் இப்படியொரு அரசியலமைப்புச் சட்டத்தினைப் பார்த்ததே இல்லையென வியந்தார் மைனா கியாய். ஒன்றில் உரிமைகள் தரப்படும் அல்லது தரப்படாது. இப்படிக் கொடுத்து வாங்குகின்ற யுக்தியை இங்குதான் பார்க்கின்றேன் என்றார். அது எமது சிங்களத் தலைவர்களின் அதிவிசே'த் திறமை என்பது அவருக்குத் தெரியவில்லை.

அதே போலத்தான் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளும். ஏந்த நிறுவனமும் பதிவு செய்யப்படலாம். ஆனால் அது செயற்படுவதற்கு அரசாங்த்தின் அனுமதி வேண்டும். வருடாவருடம் அரசு சாரா நிறுவனங்கள் யாவும் மாவட்ட செயலாளரின் அனுமதி பெற்றுத்தான் அம்மாவட்டத்தில் இயங்க முடியும். இந்த அலுவலர்கள் ஒவ்வொரு நிறுவனத்தின் வேலையின் தரத்தை வைத்து அனுமதியை வழங்கினாலும் பரவாயில்லை. எந்த வேலையை அந்நிறுவனம் செய்ய வேண்டும் என்று தாங்கள் நினைக்கின்றார்களோ, அந்த வேலைக்குத்தான் அனுமதியை வழங்குகிறார்கள்! இதுவும் எப்படியிருக்கு? இதில் கிராம மட்டங்களில் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில் செயற்படும் அரச அலுவலர்களின் ஊழல் நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்கும் தைரியத்தை மக்கள் மத்தியில் ஊட்டுகின்ற நிறுவனங்களின் பாடோ தி[illegible] மாவட்ட [illegible]த்துக்கு வ[illegible] அந்த நிறுவனத்தைப் புகழவா போகின்றனர்? " இது என்ன செய்கின்றது என்பது எங்களுக்குத் தெரியாது, எங்களுக்கு ஒன்றுமே தெரிவிப்பதில்லை. இவர்களின் வேலையினால் அப்படியொன்றும் நல்ல விளைவு எற்படவில்லை.." என இவ்வாறு பொய்களை அடுக்குவார்கள். பிறகென்ன, நிறுவனத்துக்கு இயங்க அனுமதி கிடைக்காது. மக்கள்தான் கடைசியில் நல்ல சேவையை இழக்கின்றனர். இது மட்டுமல்லாமல், ஒவ்வொரு அமைச்சுக்கும் அரச திணைக்களத்துக்கும் எந்தவொரு அரசு சாரா நிறுவனத்துடனும் இணைந்து செய்ற்படக்கூடாது என்கின்ற பணிப்புரை வழங்கப்பட்டிருக்கின்றது. எங்கு போனாலும் அமைச்சரிடமிருந்து (இதனைக் கொழும்பு அரசாங்கம் என வாசிக்கவும்) அனுமதி பெற்று வாருங்கள் என்னும் புராணந்தான். போதாக்குறைக்கு ஒவ்வொரு நிறுவனமும் தான் பெற்றுக்கொள்ளும் நிதிகளுக்கான வரியினையும் அரசாங்கத்துக்கு செலுத்தியாக வேண்டும். இதைவிட, வடக்கில் இருக்கவே இருக்கின்றது ஜனாதிபதி செயலணி. இதன் அனுமதியின்றி ஒரு திட்டமும் செயற்படுத்த முடியாது. இப்படியான விபரங்களுடன் எமது பொது ஆர்ப்பாட்டங்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறையினையும் பற்றிக் கூற ஆரம்பித்தோம். அவ்வளவுதான், ஸ்ரீலங்கா பற்றிய விசேட சம்பவக் கற்கைகள் எழுதித் தரப்படவேண்டும் என்று சபையில் கூறிவிட்டார்கள்.

விசேட தூதுவர்களின் அறிக்கைகளில் சிபாரிசுகள் பகுதியே மிகக் கடினமானது என்று மனந் திறந்தார் கியாய். "நாம் எல்லோரும் ஒரே வகையான சிபாரிசுகளைத்தான் திரும்பித் திரும்பி எழுதுகின்றோம். புதிய யுக்திகள் ஏதாவதிருந்தால் கூறுங்களேன்.." என்று கோரினார். ஐநாவின் ஒவ்வொரு உறுப்பு நாடும் ருளைைநசளயட 'நசழைனஉை சுநஎநைற எனப்படும் மனித உரிமைகள் பற்றிய மீளாய்வுக்குத் தன்னை ஒவ்வொரு நான்கு வருடங்களும் உட்படுத்த வேண்டும். இம்மீளாய்வினில் மீளாய்வுக்கான காலகட்டத்தில் அரசுக்கெதிராக ஏற்பாடு செய்யப்பட்ட எத்தனை ஆர்ப்பாட்டங்கள் அமைதியாகத் தடையின்றி நடத்த விடப்பட்டன என்னும் .எண்ணிக்கைகளைக் கோரலாமே என நான் முன்வைத்தேன். இங்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவேனும் சில ஆர்ப்பாட்டங்களை அவாகள் அனுமதிக்க முயற்சி செய்வார்கள் அல்லவா? அது போலவே சமூக நிறுவனங்களின் செயற்பாட்டிற்கான நிதிகளை வழங்குவதற்கானதொரு விசேட பொறிமுறையையும் ஐநா ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். இவை பற்றியெல்லாம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு எற்படுத்துவதற்கு செயற்படும் வகையில் தொடர்பூடகங்களுக்கு ஐநா நிதிகள் மூலமாகப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் எனவும் சிபாரிசு செய்யப்பட்டது.

அரசுகளின் எதேச்சாதிகாரத்திற்கான ஒரேயொரு மாற்று சிவில் சமூக அமைப்புக்களாகும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும், ஒரு விடயப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் கொள்கை மாற்றங்களை அரசாங்கத்தில் கொண்டுவருவதற்கான அழுத்த சக்தியாக செய்படுவதும், அரசுகளின் உரிமை மீறல்களைப் பகிரங்கப்படுத்துவதும், மக்களைத் திரட்டி அரசு அதிகாரத்துக்கு சவால் விடச் செய்வதும் இவைதான். மக்களுக்கு பாதுகாப்பினையும் அவர்கள் அபிவிருத்திச் செயற்பாடுகளை நெறிப்படுத்தும் வலுவினையும் கொடுக்கும் இவற்றின் செயற்பாட்டினை மக்களே மிக அக்கறையுடன் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும். எமது கலாசாரத்தில் . கோயில்களுக்குக் கொடுக்கும் பழக்கம்தான் எங்கள் மத்தியில் இருக்கின்றது. இதனைச் சற்று மாற்றி நல்ல நிறுவனங்களை இனம் கண்டு அவற்றின் செயற்பாடுகளுக்கு நிதிகளை வழங்க மக்கள் முன்வரவேண்டும். அரசு சாரா நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆதரிக்கும் இக்கோரிக்கை எமது அரச ஊழியர்களுக்கும் பொருந்தும். கட்டளையிட்டதை சிரமேற்கொண்டு செயற்படுத்துவதை விடவும் மக்களின் நீண்ட கால நலனைக் கருத்தில் கொண்டு செயற்படும் கடமை அவர்களுக்கு உண்டு. நாம் நினைத்தால் ஒன்றிணைந்து இந்த அரசின் நிகழ்ச்சிநிரலை நிச்சயம் தோற்கடிக்கலாம்.

**சாந்தி சச்சிதானந்தம்**

**நன்றி – குளோபல் தமிழ்ச் செய்திகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 06 . பாடம் - கணிதம்

1. சதுரமொன்றின் பரப்பளவு $625m^2$ எனின், அச்சதுரத்தின் சுற்றளவைக் காண்க.

1. $99225 = 3^4 x 5^2 x 7^2$ ஆயின் 99225 இன் வர்க்கமூலத்தைக் காண்க.

3. $x - x^3$ இன் காரணியைக் காண்க.

4. $\log 2 = x$ எனின், lg5 ஐக் காண்க.

5. பொ.ம.சி யைக் காண்க. $x^2+5x+6$, $(x+2)^2 (x-3)$, $x^2-9$

6. $x^2 + cx-12$ என்ற இருபடிக் கோவையின் ஒரு காரணி (x+3) ஆயின், c இன் பெறுமானம் என்ன?

7. ஒரு பேனாவின் விலை ரூ x எனின், ரூ y க்கு எத்தனை பென்சில்கள் வாங்கலாம்?

8. 5, 15, 25, 35 …. ஏன்ற கூட்டல் தொடரில் 20ம் உறுப்பைக் காண்க.

9. $(3a^{-2}b^{-1})^{-2}$ என்பதை நேர்ச்சுட்டியில் தருக.

10. ஐங்கோணி ஒன்றின் நான்கு கோணங்கள் முறையே 90, 102, 136, 110 பாகைகள் எனின், எஞ்சிய கோண அளவைக் காண்க.

11. $x/5 = 2/3$ எனின், $(x-y) / (x+y)$ இன் பெறுமானம் காண்க.

12. $2x - y +3z$ ஐ $x - 2y - 4z$ இலிருந்து கழிக்குக.

13. $(x+4)^2$ இன் விரிவினை எழுதுக.
14. $x^2+8x+16 = 100$ இச்சமன்பாட்டில் x ஐக் காண்க.

15. உருளையின் கனவளவு $15000cm^3$, குறுக்கு வெட்டுப்பரப்பு $250cm^2$ எனின், உயரத்தைக் காண்க.

16. சுருக்குக. 10 + 10.1 + 10.12 + 10.123 + 10.1234

17. ரூபா 1200 பெறுமதியான பொருள் ஒன்று ரூபா 1560 இற்கு விற்கப்படுகின்றது.
 அ. இலாபம் எவ்வளவு?
 ஆ. இலாப நூற்று வீதத்தைக் காண்க.
 இ. இதே பெறுமதியான இன்னொரு பொருள் அதிலிருந்து பழுது காரணமாகப் 10 வீதம் நட்டத்திற்கு விற்கப்பட்டது. விற்ற விலையைக் காண்க.

18. 8070 ஐ விஞ்ஞான முறைக் குறியீட்டில் எழுதுக.

19. அ. மரம் ஒன்றின் உச்சியின் ஏற்றக்கோணம் அளப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணத்தின் பெயரினை எழுதுக.
 ஆ. அவ் உபகரணத்தினை வரைந்து ஏற்றக்கோணத்தின் அளவினைத் தருக்.
 இ. வெளிச்ச வீட்டின் உச்சியில் இருந்து அவதானிக்கும் ஒருவனுக்கு கடலில் உள்ள வள்ளம் ஒன்று 40 பாகை இறக்கக்கோணத்ததில் தெரிகின்றது. வெளிச்ச வீட்டின் உச்சி கடல் மட்டத்தில் இருந்து 90 மீற்றர் உயரத்தில் உள்ளது.

## சென்ற வார விடைகள்

1. 4 கிலோகிராம் 2. 34.5
3. ரூபா 425 4. 5 : 6
5. அ. 35, 45 ஆ. 7 : 9 அல்லது 9 : 7
6. ரூபா 9 7. 12
8. அ. 300ஓ 8ஓ ஸ்ரீ 924 ஆ. 3
9. $2.005x 10^3$
10. 4 நிமிடம் 11. 4.25
12. அ. 4 ஆ. 27 13. 72
14. அ. $10800cm^2$ ஆ. 864000ml இ. 756L
15. அ. S = {1, 2, 3, 4, 5, 6} ஆ. 1/2
16. அ. 60Km/h ஆ. காலை 12.30 இ. 210Km
17. அ. 100 மீற்றர், 75 மீற்றர் ஆ. 350 மீற்றர்

**கணிதம் வழிகாட்டல் -**
**திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சைக்கான பயிற்சிகள் - 01

பாடம் - வரலாறு

(01) கல்வெட்டுக்களில் "கெதுவ, அருப்" என்ற பதங்களால் குறிப்பிடப்படும் பயிர்ச் செய்கை
 1 .சேனைப்பயிர் 2. வீட்டுத்தோட்டம் 3. நெற்செய்கை 4. தானியச்செய்கை
(02) ஒலுவடு என மகாவம்ச நூலில் குறிப்பிடப்படும் தொழில்
 1. ஆடைத் தொழில் 2. நெசவு 3. ஓடு,செங்கல் உற்பத்தி 4. ஆபரணம்
(03) ஸ்ரீ அந்தராப்பன' என்ற பெயரில் சந்தை காணப்பட்ட இடம்
 1. அநுராதகம 2. விஜிதகம 3. உபதிஸ்ஸகம 4. உருவெலகம
(04) தபசு,பல்லுக என்ற வியாபாரிகளால் கட்டப்பட்ட விகாரை
 1 .தூபராம 2. ஹிரிகடுசாய 3. அபயகிரி 4 .வெல்கம் விகாரை
(05) இலங்கையில் மிகப் பெரிய தூபி
 1. ஜேத்தவனராமய2. மகாவிகாரை3. தூபராம4. அபயகிரி
(06) பண்டைய நீர்பாசன அமைப்பில் குளத்தின் பகுதியான கலிங்கல் தொட்டியால் ஆற்றப்பட்ட பணி
 1. மேலதிக நீரை வெளியேற்றுதல்
 2. குளக்கட்டை நீரரிப்பிலிருந்து பாதுகாப்பது
 3. குளத்தில் சேரும் அடையல்,உக்கல்களை தடுத்தல்
 4. கலிங்கல்லின் ஊடாக நீர் வெயியேறும் போது குளக்கட்டிற்கு ஏற்படும் அழுக்கத்தை குறைப்பது
(07) மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப்பட்ட மன்னன்
 1. மகாசேனன் 2. தாதுசேனன் 3.பண்டுகாபயன் 4. வசபன்
(08) 1. கிராம தலைவன்யு.மாபா
 2. மாயரட்டைக்கு பொறுப்பானவன்டீ.பருமக
 3. உருகுணுரட்டைக்கு பொறுப்பானவன் ஊ.ஏப்பா
(09) அவுக்கண புத்த சிலை காணப்படும் இடம்
 1. கலாவாவி அருகில்2. குட்டம் பொய்கை அருகில்3. கல் விகாரையில்4. புதுருவகல
(10) அ. கலிகால சாகித்ய சரிவஞ்ஞ பண்டிதன் என பெயர் பெறல்
 ஆ. கலிங்கமாகனை விரட்டி அடித்தல்
 இ. கவிசிலுமின விசுத்தி மார்க்க சன்னய இலக்கியம் படைத்தல்
 மேற்படி தகவலுடன் தொடர்புடைய அரசன்
 1. 3ம் விஜயபாகு 2. 2ம் பராக்கிரமபாகு 3. 4ம் பராக்கிரமபாகு 4. 2ம் புவனேகபாகு
(11) குருணாகலில் அத்துக்கல்புரவை தலைநகராக்கியவன்
 1. 1ம் புவனேகபாகு 2. 2ம் புவனேகபாகு 3. 3ம் புவனேகபாகு 4. 4ம் புவனேகபாகு
(12) தூது விடு இக்கிய காலம்
 1 .கம்பளை 2. குருணாகல் 3. கண்டி 4. கோட்டை
(14)இந்தியாவில் டில்லி சுல்தான் ஆட்சியின் வீழ்ச்சிக்கு காரணமான வம்சம்
 1. லோடி 2. அடிமை 3. துக்ளக் 4. செய்யது
(15) இந்தாவில் ஜெசியா வரி என்பது
 1. யூதர் ,கிறிஸ்தவ, இந்து மக்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட வரி
 2. மசூதி,ஆலயங்களின் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரி
 3. மன்னர்களின் அரச மாளிகைக்கு சேர வேண்டியவ வரி
 4. வர்த்தம் மீது விதிக்கப்பட்ட வரி
(16) இப்ராஹிம் லோடியை தோற்கடித்து மொகலியப் பேரரசை நிறுவிய மன்னன்
 1. அக்பர் 2. பாபர் 3. சாஜகான் 4. 2ம் பகதூர்சா
(17) சீனரின் பிரதான மதம் அல்லாதது
 1. கொன்பியூஸியஸ் 2. தாவோ 3.பௌத்தம் 4. சின்டோ
(18) அங்கோர்வாட் விகாரை காணப்படும் இடம்
 1. கம்பூச்சியா2. ஜாவா3. பர்மா4. தாய்லாந்து
(19) பின்வருவனவற்றுள் மானிய முறையின் அம்சம் அல்லாதது
 1. ஆட்சி ஒருமுகப்படல் 2. சகல அதிகாரம் கொண்ட அரசாட்சி
 3. சுயபூர்த்தி பொருளாதாரம் 4. நைட்டுக்கள்,பிரபுக்களின் செல்வாக்கு மேலோங்குதல்
(20) ஐரோப்பாவின் மறு மலர்ச்சியின் தொட்டில்
 1. பிரான்ஸ் 2. இத்தாலி 3. இங்கிலாந்து 4. ஸ்பானியா
(21) ஆரியர் இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைத்துக் கொண்ட குடியேற்றம்
 1. தீககம, உபதிஸ்ஸகம 3. மஹாகம, தீககம
 2. உபதிஸ்ஸகம, அனுராதகம 4. தீககம, விஜிதபுர
(22) கீழ் குறிப்பிடும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னன்
 சோழரிடம் இருந்து நாட்டை விடுவித்தல்
 முதன் முதலில் மகாதீத்த துறைமுகத்தில் காவலரண் அமைத்தல்
 பாண்டிய நாட்டுடன் திருமண உறவை ஏற்படுத்தல்
 1. 1ம் பராக்கிரமபாகு 2. நிஸ்ஸங்கமல்லன் 3. மகாசேனன் 4. 1ம் விஜயபாகு
(23) இறந்த விலங்குகளை புதைக்கும் இடமாக எனது வயிற்றை வைத்திருக்க விரும்பவில்லை என கூறி மாமிசத்தை ஒதுக்கிய மன்னன்
 1. அசோகன் 2. எல்லாளன் 3. அக்பர் 4. கனிஷ்கன்
(24) கோட்டை இராசதானி காலத்தில் இலங்கை வந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
 அ - கடலாதெனிய , லங்காதிலக விகாரை அமைப்பு
 ஆ - சப்புமல்குமாரய ஆரியசக்கரவர்த்திகளின் ஆதிக்கத்தை ஒழித்தல்
 இ - வெஸ்ட வோல் உடன்படிக்கை இடம்பெறல்
 ஈ - ஸ்பில்பேர்கன் இலங்கை வருகை
 1. அ, இ, ஈ 2. ஆ, ஈ 3. இ, ஈ 4. ஈ, ஆ
(25) முதலாம் உலக மகாயுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க பங்குபெறுவதற்கான உடனடிக்காரணம்
 1. பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சியடைந்தமை
 2. ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை
 3. நீர்மூழ்கிக் கப்பலின் மூலமாக லுசிதானியா கப்பல் தாக்குதலுக்குள்ளானமை
 4. யப்பான், பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை
(37) இயற்கை சிறுகுன்றை மூடுமாறு அமைக்கப்பட்ட பௌத்த விகாரை
 1. பாமியன் 2. சுவெதகொன் 3. போரபுது 4. அங்கோருவார்



ஆசிரியர் :
த.அகிலன், Dip. in. Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலைவெற்றிப்படி
ஆசிரியர்,
ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேசர் பூமியிலும்....

தரவுகளின் படி திருகோணமலை விளையாட்டுமைதான புதைகுழியைப் பார்வையிட நாங்கள் ஸ்தலத்திற்குச்சென்றோம். செய்தியாளர்களை அனுமதிக்கவில்லை. நாங்கள் தமிழ் செய்தியாளர்கள் என்றாலும் எங்களுடன் வந்த சிங்கள செய்தியாளர்களும் அனுமதிக்கப்படவில்லை. அரச அதிபர் ரி.ரி.ஆர். டிசில்வா, பிரதி காவல் மா அதிபர் கபில உட்பட பல உயர் மட்டத்தினர் வருகைதந்து பார்வையிட்டுச்சென்றனர். முதலில் கிறைம் வேலி மஞ்சள் பொலித்தினினால் வட்டமாக போடப்பட்டன. பின்னர் அவை அகற்றப்பட்டன.

திருக்கேதீஸ்வரத்திற்கு அண்மையில் மனிதப் புதைகுழியொன்று கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போதுவரை சுமார் 53 மனித உச்சங்கள் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## 1000 பக்கங்கள் தாங்கிய...

கௌரவ மாணிக்கம் இளஞ்செழியன் அவர்கள் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது. முதற்பிரதியை அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் திரு.முத்தையா கதிர்காமநாதன் அவர்களும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசச் செயலாளர் திருமதி.சசிதேவி ஜலதீபன் அவர்களும் திரு.வேதநாயகம் வரதசுந்தரம், திரு.இராசையா ஸ்ரீதரன் ஆகியோர்களும் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வரலாற்று ஆய்வாளருமாகிய செல்வி கதிர்காமநாதன் தங்கேஸ்வரி அவர்கள் கருத்துரை வழங்கினார்.

பெருந்திரளான மக்கள் இந்நூல் வெளியீட்டு விழாவுக்குச் சமூகமளித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து கல்விச் சமூகப்பணிச் சபையின் அறக்கட்டளை நிதியுதவி வழங்கும் வைபவம் இடம் பெற்றது. 42 பயனாளிகளுக்கு பிரதம அதிதிகள் நிதியுதவியினை வழங்கி வைத்தார்கள். திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் தம்பலகாமப்பற்று நம்பிக்கைப் பொறுப்பாளர் திரு.நாகமணி திவாகரன் அவர்களின் நன்றியுரையுடன் இனிதுற முடிவுற்றன நிகழ்வுகள்.

## சிசிலியாவில்....

மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிவைப்பதையும், மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டுமுகமாக இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.








## விற்றவர்.....

கைத்தொலைபேசியொன்றை கடந்த வருடம் ஜூலை மாதம் ௨௪,760.00 செலுத்தி கொள்வனவு செய்திருந்தார்.

அதன் பின்னர் அதே கடையில் கோயில்குரு ஒருவரும் கைத்தொலைபேசியொன்றைக் கொள்வனவு செய்துள்ளார். தான் கொள்வனவு செய்த கைத்தொலைபேசியை குரு மட்டக்களப்பில் உள்ள தனது அண்ணனுக்குப் பரிசளித்துள்ளார். அப் பரிசளிக்கப்பட்ட கைத்தொலைபேசி சில நாட்களில் களவாடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கைத்தொலைபேசியின் பெட்டியுடன் கடந்த டிசம்பர் மாதம் காத்தான்குடி காவல்நிலையத்திற்குச் சென்ற குருவின் தமையனார் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார். அம்முறைப்பாட்டை அடுத்து பெட்டியில் இருந்த தொலைபேசி இமி இலக்கம் மூலம் தொலைபேசி இலக்கத்தை அறிந்துகொண்டு அவ்விலக்கத்துடன் தொடர்பு கொண்ட காவல்துறைக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அத் தொலைபேசி இலக்கம் வேறு ஒருவருக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த மற்றையவரை காத்தான்குடிக்கு அழைத்த காவல்துறை அவரது ௨௪,760.00 பெறுமதியான கைத்தொலைபேசியையும் சிம் மற்றும் கொள்வனவுப் பற்றுச்சீட்டையும் கையகப்படுத்தியுள்ளது.

எனினும் தற்போதுவரை எவ்வித மேல் நடவடிக்கையையும் காத்தான்குடி காவல்துறையினர் மேற்கொள்ளவில்லை என கைத்தொலைபேசியை காவல்துறையிடம் பறிகொடுத்தவர் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளார். நடந்த விடயம் தொடாபாக அவர் தெரிவிக்கையில் விற்ற கடைக்காரர் தனது கைத்தொலைபேசியின் பெட்டியை குருவிற்கு விற்ற கைத்தொலைபேசிக்கு இட்டுக் கொடுத்தாலேயே இந்நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இத்தவறுக்குப் பொறுப்பாக கடைக்காரர் மீது திருகோணமலைக் காவல்துறை பிரதான நிலையத்தில் புகாரளிக்கச் சென்ற தனது புகாரை வாங்க மறுத்த பிரதான காவல்துறை நிலைய அலுவலர் தன்னை உரிய கடைக்காரரிடம் செல்லுமாறும் அங்கு அவருக்குப் புதிய கைத்தொலைபேசி ஒன்று தரப்படும் என்றும் தெரிவித்துத் திருப்பியனுப்பியதாகவும் அதன்படி தான் கடைக்குச் சென்றபோது தனக்கு அவ்வாறு புதிய தொலைபேசி கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக உரிய கடைக்காரரைத் தொடர்பு கொண்ட போது தான் அவ்வாறு பெட்டியை மாற்றி விற்ற தவறை தெரியாமல் செய்ததாக ஒப்புக்கொண்டனர். தாம் பல தொலைபேசிகளை விற்பதால் பெட்டிகள் தொடர்பாக அதிகளவு கவனம் செலுத்தவில்லை என்றும் தற்போது மிகக் கவனமாகவே தொலைபேசிகளை பெட்டியுடன் ஒப்பிட்டு விற்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து காத்தான்குடி காவல் நிலையத்திற்கு கடைக்காரருடன் கொள்வனவாளர்கள் இருவரும் சென்றதுடன் அங்கு அக் கைத்தொலைபேசியைக் கண்ணுற்ற பறிகொடுத்தவர் அத்தெலைபேசி தன்னுடையதில்லை என்று தெரிவித்துள்ளார். எனினும் தற்போதுவரை கைத்தொலைபேசி காத்தான்குடி காவல் துறையால் விடுவிக்கப்படவில்லை. தொலைபேசியைப் பெற்றுக் கொள்ளாத இரண்டாமவர் தற்போது மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார்.

## கிரியாரம்பம்

சைவ மணம் வீசும் பாண்டவர் பூமியென தொன்றுதொட்டு வர்ணிக்கப்படும் பாண்டிருப்பில் புதிதாக அமையப் பெற்றுள்ள கடற்கரை ஸ்ரீ சிவன் ஆலயத்தின் கிரியாரம்ப நிகழ்வினை சிவஸ்ரீ கணபதி யோகராசா குருக்கள் நாடாத்துவதையும், அருகில் ஆலய தலைவர் கலாபூசணம் ஞானமானிக்கம் உட்பட நிருவாகத்தினர் நிற்பதையும் காணலாம்.



## அரசின் அங்கத்தவ.....

கொண்டுவரப்படவுள்ள 3வது பிரேரணை வெற்றியடைந்தால் உடனடியாகவே பயணத் தடைகளை அரச பிரதிநிதிகளின் மீது விதிப்பதற்கு அவ்வமைப்புக்கள் அழுத்தங்களைப் பிரயோகித்திருப்பதாகத் தெரிகின்றது.

இக் கூட்டத்தில், தம்மிடையே கருத்துமுரண்கள் இருந்தாலும் பல தமிழ் அமைப்புக்கள் ஒத்த குரலில் இவ் வேண்டுகளை மேற்கொண்டதாகவும் அக் கலந்துரையாடலுக்கு இங்கிலாந்தின் தொழிலாளர் கட்சியையும், பழைமைவாதக் கட்சியையும் பிரதிநிதித்துவப் படுத்தும் இரண்டு நாடாளுமன்ற அங்கத்தவர்களும், அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மேலும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏழை மக்களின்...

காகித ஆலை நிர்வாகமே எழுபைத்தைந்திற்கும் மேற்பட்ட இரும்பு லொறிகள் விற்ற பணம் எங்கே. இரண்டு மாதச் சம்பளப்பணத்தை தராமல் ஏமாற்றும் முகாமையே வெளியேறு, ஏழை ஊழியர்களின் இரத்தம் உறிஞ்சும் தலைமை அதிகாரியே உன்னை வெளியேற்றுவோம், தொழிலாளர்களுக்குள் பிளவு ஏற்படுத்தும் முகாமையே இது உனக்குத் தேவையாஇ எமது பிள்ளைகளின் பசிஇ பட்டினியோடு தவிசாளர் சுகபோக வாழ்க்கை என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி சம்பவத்தை கேள்வியுற்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா அவ்விடத்திற்கு சென்று ஊழியர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது அவரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

அம மகஜர் தொடர்பாகப் பாராளுமன்றில் பிரேரணையொன்றை முன்மொழிவதாக அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

## தமிழ் சிங்கள் மக்களிற்கு...

கல்முனை பிரதேச தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் மக்கள் சந்திப்பு கல்முனை சிங்கள மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்

கல்முனைப் பிரதேசத்தில் மூவின மக்கள் வாழ்கின்ற போதிலும் இங்குள்ள தமிழ் சிங்கள மக்கள் வசிக்கும் பகுதிகளில் அபிவிருத்தித்திட்டங்கள் போதியளவு முன்னெடுக்கப்படாதுள்ளது. இதனால் கல்முனை வாழ் தமிழ் சிங்கள மக்கள் அபிவிருத்தி திட்டங்களில் புறக்கணிக்கப்படுகின்றனர்.

மேலும் இப்பிரதேசத்திலுள்ள தமிழ் மக்கள் திட்ட மிடப்பட்ட வகையில் இனவாதம் கொண்ட முஸ்லிம் அரசியல் தலைமைகளினால் பழிவாங்கப்பட்டு வருகின்றனர். இதனொரு அங்கமாகவே பழமைவாய்ந்த கல்முனை ஸ்ரீ தரவைப்பிள்ளையார் கோவில் வீதியின் பெயரை கல்முனை மாநகர சபையினால் மாற்றும் முயற்சியாகும். இச்செயற்பாட்டினால் பிரதேசத்தின் அமைதிக்கும் குந்தகம் ஏற்படும் நிலையேற்பட்டுள்ளது.

கல்முனை பிரதேசத்தில் மக்கள் சார்பில் தீர்க்கப்பட வேண்டிய எத்தனையோ முக்கிய வாழ்வாதாரப்பிரச்சினைகள் இருக்கும் போது வீதிக்கு பெயர் மாற்றும் நடவடிக்கை தற்போது தேவைதானா? இங்குள்ள தமிழ் பிரதேசங்களில் அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் மிகக் குறைவாகவே உள்ளது. இப்பகுதி வாழ் மக்களுக்கென பிரதேச செயலகம் ஒன்று இன்மையே இதற்கான பிரதான காரணமாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தினை சகல அதிகாரங்களும் கொண்ட பிரதேச செயலகமாக தரமுயர்த்த அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான ஒத்துழைப்பினை எமது விகாரையின் சார்பிலும் கல்முனை வாழ் சிங்கள மக்களின் சார்பிலும் வழங்க நாம் தயாராகவுள்ளோம்

கல்முனை பிரதேசத்தில் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பாலே நான் எனது செயற்பாட்டினை செய்து கொண்டிருக்கின்றேன். என்னையும் இங்குள்ள சிலர் இன வாதியாக சித்தரிக்க முற்படுவது வேதனையளிக்கின்றது. கல்முனையில் தமிழ்,சிங்கள ,முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்றார்.

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

ஆலையடிவேம்பு பிரதேசத்திற்கான இவ்வாண்டின் முதலாவது ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன தலைமையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் 13ம் திகதி நடைபெற்றது.

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடந்தகால நிதியொதுக்கீடுகள் தொடர்பில் உண்டான குறை நிறைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் அக்கரைப்பற்று மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்காக தள்ளுவண்டியொன்றும் நாடாளுமன்ற உறுப்பினரால் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன. (உதயகாந்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## குர் ஆன் ஓதுவதன் சிறப்பம்சங்கள்

1- நீங்கள் குர்ஆனை ஓதுங்கள், அது நாளை மறுமையில் அதை ஓதியவருக்கு சிபாரிசு செய்யும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

2- குர்ஆனையும் அதைக்கொண்டு உலகத்தில் அமல் செய்தவர்களையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும். சூரத்துல் பகராவும் சூரத்துல் ஆல இம்ரானும் முன்வந்து குர்ஆனை ஓதியவருக்கு (சுவர்க்கத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக) வாதாடும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

3- குர்ஆனை ஓதியவருக்காக (நாளை மறுமையில்) சொல்லப்படும். "நீர் குர்ஆனை ஓதிக்கொண்டு சுவர்க்கத்தின் (படித்தரத்தில்) ஏறிக்கொண்டு செல்வீராக. உலகத்தில் நிறுத்தி நிறுத்தி ஓதியது போன்று (இங்கேயும்) நிறுத்தி நிறுத்தி ஓதுவீராக. நீர் ஓதி முடிக்கும் கடைசி ஆயத்தே சுவர்க்கத்தின் உமது அந்தஸ்தாகும்" என அவருக்கு கூறப்படும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத், திர்மிதி)

4- குர்ஆனில் ஓர் எழுத்தை யார் ஓதுகின்றாரோ அவருக்கு ஒரு நன்மை எழுதப்படும். ஒரு நன்மைக்கு பத்து மடங்கு நன்மை கொடுக்கப்படும். "அலி.்.ப்,லாம்,மீம் என்பது ஒரு எழுத்து" என்று நான் சொல்லமாட்டேன். அலி.்.ப் என்பது ஒரு எழுத்தாகும், லாம் என்பது ஒரு எழுத்தாகும், மீம் என்பது ஒரு எழுத்தாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

## குர் ஆன் என்பது!!

குர்ஆன் என்ற வார்த்தையின் பொருள் ஓதுதல் என்பதாகும். இது அதிகம் ஓதப்படக் கூடியது என்ற கருத்திலேயே இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் குர்ஆனுக்கு வேறு சில பெயர்களும் உண்டு அவற்றில் சில:

- வேதநூல்
- பிரித்தறிவிப்பது (சத்தியம் அசத்தியத்தை)
- உபதேசம்
- ஒளி
- வழிகாட்டி

## நாவை அடக்குங்கள்

நாவைத் தவறாகப் பயன்படுத்துவதால் விளைகின்ற குழப்பமும் கலகமும் மிகக் கொடியவை என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. அதனை எவரும் மறுக்கவும் மாட்டார்கள். ஒருவர் நாவால் மொழிகின்ற ஒவ்வொரு சொல்லும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதே. அது ஏற்படுத்துகின்ற பாதிப்பைப் பொறுத்து அது தேனாகவும் இனிக்கும் விஷமாகவும் கொட்டும். தேனாக இனிக்குமா, விஷமாகக் கொட்டுமா என்பதைத் தீர்மானிப்பது நாவின் மூலம் சொற்களை மொழிகின்ற மனிதர்தான்.

இதனால்தான் நாவைப் பயன்படுத்துகின்ற விஷயத்தில் மிக மிக விழிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சொற்கள் தாம் இதயங்களை இணைக்கின்றன. சொற்கள் தாம் இதயங்களைப் பிளக்கின்றன. சொற்கள் தாம் மனங்களை உடைக்கின்றன. சொற்கள் தாம் நெஞ்சங்களை நெகிழச் செய்கின்றன.

மனிதர்களை ஒன்றுசேர்ப்பதும் சொற்கள் தாம். ஒருவரைவிட்டு ஒருவர் விலகிப் போகச் செய்வதும் சொற்கள் தாம். அழ வைப்பதும் சொற்களே. சிரிக்க வைப்பதும் சொற்களே. சிந்திக்கத் தூண்டுவதும் சொற்களே. உணர்வுகளைக் கிளறச் செய்து மனிதர்களை உசுப்பி விடும் வேகமும் சொற்களுக்கு உண்டு. கொந்தளித்துக் கொண்டிருக்கின்ற உணர்வுகளை இதமாக அமைதிப்படுத்துகின்ற ஆற்றலும் சொற்களுக்கு உண்டு.

நாவால் சொல்லப்பட்டாலும் சரி, எழுதுகோல் மூலமாகத் தாளில் வெளிப்படுத்தப்பட்டாலும் சரி, சொற்களுக்கு இருக்கின்ற வலிமையையும் அவை ஏற்படுத்துகின்ற தாக்கத்தையும் எவராலும் மறுக்க முடியாது. தவறான சொற்கள் ஏற்படுத்துகின்ற துன்பத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.

நம்முடைய ஆளுமையை எதிரொலிப்பது நாம் மொழிகின்ற சொற்களே. தற்செயலாக, நம்மையும் அறியாமல் ஒரு சொல்லைத் தப்பித்தவறிச் சொல்லி விட்டாலும் அது நம்முடைய உள்மனத்தின் அடிக்குரலாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும்.

நாம் மொழிகின்ற சொற்கள் நம்மை சுவனத்தின் உயர் நிலைகளில் உயர்த்திக் கொண்டிருக்கும். நமக்குத் தெரியாமலே இது நடந்து விட்டிருக்கும். அதே போன்று நாம் சொன்ன ஒரு தவறான சொல், அல்லது தீய சொல் நம்மை மிகப் பெரும் பின்னடைவுக்குள்ளாக்கி விடும். நமக்குத் தெரியாமலே இது நடந்து விட்டிருக்கும் என நபிமொழிகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

சில சமயம் நாம் சாதாரணமாக, எந்த இழப்பையும் ஏற்படுத்தாது என்று நினைத்துப் பேசி விடுகின்ற ஒரு சொல் நம்மை மோசமானவர்களின் பட்டியலில் சேர்த்துவிடும் என்றும் நபிமொழிகளில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து நாவைப் பயன் படுத்துவதில் நாம் எந்த அளவுக்கு விழிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது.

### egp ( ] y) mtufspd ednkhop

நபி (ஸல்) அவர்கள் "மார்க்கம் என்பது நன்மையை நாடுவது" என்று கூறியபோது, நாங்கள் கேட்டோம்: "யாருக்கு?" நபி(ஸல்) அவர்கள், "அல்லாஹ்வுக்கும் அவனது வேதத்துக்கும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும்" என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

## சிந்தனைக்கு..

## இட்டுண்டு இரு

மானிடப் பிறவி மற்றெல்லாப் பிறவிகளிலும் மேலானது, சிறப்பானது. எனவே தான் அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்று முன்னோர் சொல்லி வைத்தனர்.

மானிடர்கள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த அறிஞர்கள் மானிடரின் சிறப்புகளை உணர்ந்து



வாழும் வழிகளைக் கூறிவைத்தனர். அவர்கள் கூறிய அறிவுரைகளில் 'இட்டுண்டு இரும்' எனும் வாக்கியம் நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டிய உத்தம வாக்கியமாகும்.

வாழும் உயிருக்கு அதிமுக்கிய தேவையானது உணவு. உணவு உட்கொள்ளவில்லையேல், மனித உடல் சக்தி யிழந்துவிடும். 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்ற பழமொழி இதனை மெய்ப் பிக்கிறது.

படாடோப வாழ்வு வாழ்பவர்களுக்குப் பசி வருவது மிகக் குறைவு. ஆனால் கடுமையான உழைப்பாளிகளுக்கும், வேலை செய்து பிழைப்பவர்களுக்கும் பசி அதிகமாக வருவதுண்டு. அதே வேளை பற்றாக்குறை வருவதும் அவர்களுக்குத்தான். இல்லாமை பற்றி பிறருக்குக் கூறி உதவியை நாடுவது இவர்கள் வாழ்க்கையில் இயற்கையாக மாறிவிடுகின்றது.

இவர்களைப் பார்த்து இவர்களெல்லாம் நடிப்புப் பரதேசிகள், இலகுவாகப் பணம் சேர்க்க வேஷமிடுகிறார்கள் என்று குறிப்பிடுவதும் உண்டு. நடிப்புப் பிச்சைக்காரர்களோ அல்லது நிஜமான பிச்சைக்காரர்களோ எப்படி இருந்தாலும் அவர்கள் வருவாய் குறைந்தவர்கள் என்பதை மறுக்க முடியாது. (தொடரும்)

- அமரர்.கலைமாமணி திமிலை. மகாலிங்கம் -




## அழகை மெருகூட்ட சில இயற்கை வழிகள்

- ஒரு நாளைக்கு ஒன்றரை லீற்றர் முதல் இரண்டு லீற்றர் வரை தண்ணீர் அருந்துபவர்களுக்கு வயிற்றுப் பிரச்சினை அவ்வளவாக வருவதில்லை. வயிறு நலமாக இருந்தால் நமது உடம்பின் சருமமும் சுத்தமாக இருக்கும்.
- குளிக்கும் முன் ஒரு வாளித் தண்ணீரில் ஒரு மூடி அளவு எலுமிச்சையைப் பிழிந்து கொள்ளவும். சோப்பு தேய்த்துக் குளித்த பின் கடைசியாக ஒரு லெமன் பாத் எடுத்தால் புத்துணர்வையும் சரும மினுமினுப்பையும் அநுபவிக்கலாம்.
- நாட்டு மருந்துக் கடைகளில் கார்போக அரிசியை வாங்கி நன்றாக தூளாக்கி மெல்லிய துணியில் அரித்து ஒரு போத்தலினுள் இட்டு வைத்து தினமும் கொஞ்சம் எடுத்து தண்ணீர் விட்டு பேஸ்ட் மாதிரி செய்து தோலில் தடவி வர தேமல் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். மேலும் பரவுவதையும் தடுத்துவிடும்.



செம்பருத்திப் பூவை நீரிலிட்டு காய்ச்சி அருந்தி வர உடல் சூடு தணியும். கண் எரிச்சல் இருக்காது, மிகவும் குளுமையாகவும் இருக்கும்.

செம்பருத்திப் பூக்களை சேகரித்து நிழலில் காயவிட்டு மொறு மொறுவென காய்ந்ததும், அரைத்து தூளாக்கிக் கொள்ளவும். ஒரு டம்ளர் பாலுடன் அரைத்த தூளினையும் இட்டு காய்ச்சி ஒரு வேளை அருந்தி வர உடலில் மினுமினுப்பு ஏற்படும்.

ஒரு டம்ளர் பசும் பாலில் ஒரு தேக்கரண்டி செம்பருத்தித் தூள், ஒரு தேக்கரண்டி தேன், தேக்கரண்டி ரோஜா இதழின் பொடி, சேர்த்து 48 நாட்கள் தொடர்ந்து அருந்தி வர மாதவிடாய் பிரச்சினைகள் உடனடியாகத் தீரும்..

## தேவையற்ற கொழுப்பை நீக்க

பெண்களுக்கு அதிக சதை இடுப்புக்கு அதிக கவனம் எடுத்து பயிற்சிகளில் ஈடுபடுதல் மிக முக்கியமானதாகும். நல்ல நடை பயிற்சி உடலில் காணப்படும் மேலதிக கொழுப்பைக் குறைக்க உதவி புரியும். டான்ஸ் ஆடத் தெரியாவிட்டாலும் நன்றாக வளைந்து நெளிந்து டான்ஸ் ஆடினாலும் சதை குறைப்பு ஏற்படும். எந்த வேலை செய்யும் பொழுதும் வயிற்றை நல்லா உள் இழுத்து விடவும். அடிக்கடி செய்துவர வயிற்றுப்பகுதி சதை குறையும்.

மேலும் நேராக நின்று கொண்டு இரண்டு கைகளையும் மேலே தூக்கி அப்படியே ஒரு கையை மட்டும் கீழே கொண்டு வரும்பொழுது இடுப்புடன் உடலையும் வளைக்கவும். இதே போல் இரண்டு பக்கமும் 10 முறையேனும் செய்து வரும்பொழுது இடுப்பு மடிப்பின் சதை குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவிற்குப் புதிய மேலதிக அரச அதிபர் -

(கொலின்)
மட்- மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திரு. சீ.கிரிதரன் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெறுகிறார். மாவட்ட செயலகத்தில் கடந்த 12ம் திகதி இவர் தனது பதவியை பொறுப்பேற்றுள்ளார்.



## ஞானம் பௌண்டேசனின் உதவிகள்

ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தால் கிழக்கு மாகாணத்தில் உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் கற்பதற்கு வசதிகளின்றி வறுமைக் கோட்டுக்குள் வாழுகின்ற பெற்றோர்களின். பிள்ளைகளுக்கு பல்துறை மேற்படிப்பை தொடங்குவதற்கு புலமைப்பரிசில் திட்டத்தினை ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தினால் சென்ற ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு வின்சன் மகளிர் மகா வித்தியாலயத்தில் வழங்கிவைக்கப் பட்டது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலய பிரதிகல்விப் பணிப்பாளர் மட்மேற்கு வலயகல்வி பணிப்பாளர் பிரதிகல்விப்பணிப்பாளர், ஈச்சிலம்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர் ஆறு மாணவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. இதற்கான காசோலையினை ஈச்சிலம்பற்று கோட்டக்கல்வி அதிகாரி திரு.எஸ்.லோகராஜாவழங்கிவைத்தார்

இப்புலமைபரிசில திட்டத்தில உள்வாங்கப்பட்ட மாணவர்ஒருவர் கருத்து தெரிவிக்கையில் நான் ஒரு ஏழை விவசாயியின் மகன். உயர் தரம் சித்தியடைந்து மேற்படிப்பைத் தொடங்க முடியாமல் இருந்தபோது இந்தஉதவும் கரங்களால் என் வாழ்வில் ஒளியேற்றப் பட்டுள்ளதனை எண்ணி நான் மட்டு மன்றி எனது குடும்பமும் சந்தோசமடைந்துள்ளது. இந்த உதவி என்னைப் போன்ற ஏழை மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும. நான் தற்போது அளவியல்விஞ்ஞானப் பிரிவில் படிப்பினை மேற்கொள்ளவுள்ளேன் எனக் குறிப்பிட்டார். (கல்லடிநிருபர்)

### சுடுகலனுடன் நபர் கைது

தமண - திசவாபிய பகுதியில் துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 48 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.
அவர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார்.

### புதிய பதவியில் திரு. அமலநாதன்

கிழக்கின் சுகாதார மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய சிரேட்ட நிர்வாக சேவை அலுவலர் எஸ் அமலநாதன் அவர்கள் மத்திய அமைச்சின் கீழ் இயங்கும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளராக பதவியேற்றுள்ளார்.



## சிறுவர் போராளி ஒருவருக்கு மரணதண்டனை



புலிகளின் சிறுவர் போராளியாக இருந்த வேளையில் கைதான திருகோணமலை ஆலங்கேணி பகுதியை சேர்ந்த 38 வயதுடைய சிவகந்தராசா என்பவருக்கு 24 வருடங்களின் பின்னர் நேற்று திருகோணமலை மேல்நீதிமன்றம் மரணதண்டனை தீர்ப்பளித்துள்ளது என "வணக்கம் லண்டன்" இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் அச்செய்தியானது 1990 ஆம் ஆண்டில் திருகோணமலை கடற்பரப்பில் ஆறு பொதுமக்களை புலிகளுடன் இணைந்து வெட்டிக்கொலை செய்ததாக இவர் மீது நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.
சீனன் குடா கடற்படை தளத்தினை அண்மித்த பகுதியில் 14 வயதாக இருக்கும் போது அவர் சிறைப்பிடிக்கப்பட்டு சுமார் 14 வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்த அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நி"ரூபிக்கப்படாத நிலையில் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் வாரத்தின் ஞாயிற்றுக் கிழமைகளில் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிடும் படியும் பணிக்கப்பட்டுமிருந்தார்.
இந்நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணை மீண்டும் வந்த போதே அவருக்கு மரணதண்டனை தீர்ப்பளித்த திருகோணமலை மேல்நீதிமன்றம் அவரை மீண்டும் சிறையில் அடைத்துள்ளனர். மேலும் இவர் பிணையில் விடுவிக்கப்பட்ட காலத்தில் திருமணம் செய்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலை மாணவரின் இரத்தான முகாம்

திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கடந்த 09ம் திகதியன்று இரத்ததான நிகழ்வொன்று நடைபெற்றது இடம்பெற்றது. இந்நிகழ்வானது திருகோணமலை பொதுவைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் திருகோணமலை மாவட்ட நகரசபை வளாகத்திலுள்ள திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவ ஒன்றிய அலுவலகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை நகரசபைத்தலைவர் திரு.க.செல்வராசா அவர்கள் இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்ததோடு திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.அத்தோடு இந்நிகழ்வில் கிழக்குமாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜனார்த்தனன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதில் பாடசாலை மாணவர்களும் ஆர்வம் காட்டியமை சிறப்பான அம்சமாகும்.



## செய்திக் குறிப்புக்கள்

## ஓரினச் சேர்க்கையால் இலங்கையர் கொலை?

மலேசியாவில் இலங்கையர் ஒருவரின் சடலம் அவரது வசிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. அண்மையில் பல்கலைக் கழகக் கல்வியை நிறைவுசெய்த இளைஞன் ஒருவனின் சடலமே மீட்கப்பட்டுள்ளது என மலேசிய காவல்துறை மீட்கப்பட்டுள்ளது. சுமார் மூன்று தொடக்கம் ஏழு நாட்களுக்குள் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ள காவல்துறை அவரது அறையில் இருந்து பாலியல் உபகரணங்கள், மருந்துவகைகள் மற்றும் திரவப் பொருட்கள் உட்படி அவரது கைத்தொலைபேசியையும் மீட்டுள்ளனா.
அவரர் உயிருக்குப் போராடிய தடங்கள் இருப்பதாகத் தெரிவித்த காவல்துறை அவரது அறையைப் பகிர்ந்து கொண்டவர்கள் மேலும் மூவர் என்றும் அம்மூவரில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உட்பட இருவர் சிறிது காலத்திற்கு முன்னரே தத்தமது நாட்டுக்குச் சென்று விட்டதாகவும் தெரிவித்தனர்.
எனவே எஞ்சிய போலந்து நாட்டவரின் மீது தான் சந்தேகம் இருப்பதாகவும் அவரைத் தேடி வருவதாகவும் மலேசயி காவல்துறை அறிவித்துள்ளது.

## மாணவியின் மீதான சேட்டைக்கு தர்ம அடி

அக்கரைப்பற்று, பனங்காடு பிரதேசத்தில் வீதியால் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த மாணவி ஒருவரை முச்சக்கரவண்டி ஒன்றில் சென்று பகிடிவதை செய்து அவரை கீழே விழுத்தி காயப்படுத்திய 4 இளைஞர்களை காவல்துறை கைது செய்துள்ளனர்.
சம்பவத்தில் காயமடைந்த மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.
கண்ணகிபுரத்தைச் சேர்ந்த 17 வயது மாணவியொருவர், ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் மாலை நேர வகுப்பை முடித்துக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் சாகாம பிரதான வீதியால் வீடு திரும்பிக் கொண்டிருந்துள்ளார்.
இதன்போது பனங்காடு மயானத்துக்கு அருகில் முச்சக்கரவண்டியில் சென்ற இனம்தெரியாத 4பேர் கொண்ட இளைஞர்குழுவின் சேட்டையால் மாணவி காணமடைய குழமிய மக்கள் அவர்களுக்கு தர்மஅடி கொடுத்து காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

வதைக்கப்படும் சிறுவர்
தொடர்பாக அறிவியுங்கள்
அரசிற்கு - 1929
மலைமுரசிற்கு - 075 4252042
சிறுவர்களே எங்களின் எதிர்காலம்

## இறக்குமதிக்கான கடன் கடிதத்தை வழங்க வேண்டாம்

சில உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதத்தை வழங்க வேண்டாம் என அரச வர்த்தக வங்கிகளிடம் திறைசேரிச் செயலாளர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். கிழக்கு, பெரிய வெங்காயம், சோளம், செத்தல் மிளகாய், அரிசி போன்ற பொருட்களின் இற்க்குமதிக்கான கடன் கடிதங்களையே வழங்க வேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாடு மேற்போந்த பொருட்களில் உற்பத்தித் தன்நிறைவை அடையும் நிலைநோக்கி முன்னேறி வருவதால் இப் பொருட்களை இறக்குமதி செய்வது நல்லதல்ல என்பதே அவரது கணிப்பாக உள்ளது.
வருடாந்தம் சுமார் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை இவ் இறக்குமதிக்காக செலவிடுவது உள்நாட்டு உற்பத்தித் தன்நிறைவால் நிறுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். கடன் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளாது விட்டால் இறக்குமதியாளர்கள் தடைகளை எதிர்கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிங்கள மக்களிற்கு அநீதி - சங்கரத்ன தேரர்

தமிழ், சிங்கள மக்கள் திட்ட மிடப்பட்ட வகையில் இனவாதம் கொண்ட முஸ்லிம் அரசியல் தலைமைகளினால் பழிவாங்கப்பட்டு வருகின்றனர். கல்முனை வாழ் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு தீர்வு பெற்றுக்கொடுக்க முன் வர வேண்டும் என கல்முனை ஸ்ரீ சுபத்திர ராம விகாரையின் விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர் தெரிவித்தார்.

13



# தேசிய உயர்கல்விக் கொள்கையில் மாற்றம்!!!

தேசிய உயர் கல்விக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றத்தை அடுத்து நிபுணத்துவக் கற்கைப் பட்டப் படிப்புக்களை தடையின்றி இழங்கையில் வழங்கவும் பட்டங்களை வழங்கவும் அங்கீகாரம் வழங்கப்படும் அனைத்துத் தரப்பினரும் வழங்கும் நிலை உருவாகியுள்ளது.

பொறியியல், மருத்துவம், கணக்கீடு மற்றும் அகழ்வாராய்ச்சித் துறை ஆகிய துறைகளில் உயர் பட்டங்களை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகள் நீக்கப் பட்டுள்ளதால் இந் நிலை உருவாகியுள்ளது.

எனினும் அகில இலங்கை மருத்துவ சங்கம் இவ்வாறு தடைகளை நீக்கியதற்கு தனது கடும் கண்டனத்தை வெளியிட்டதை அடுத்து அக் கல்விக்கு மட்டும் தடைகளை மீளக் கொண்டு வரும் முடிவை அரசு எடுத்துள்ளதாகத் தெரிகின்றது

# யானை அனர்த்தத்தை எதிர்கொண்டோருக்கு உதவிகள்

(உதயகாந்)

சமூக சேவைத் திணைக்களத்தினால் யானைகளினால் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வீடுகளை திருத்தியமைப்பதற்காக வழங்கப்படும் இருபதாயிரம் பெறுமதியான காசோலையினை ஆலையடிவேம்பு சாந்திபுரம் கிராம பிரிவிற்குட்பட்ட பயனாளி ஒருவருக்கு பிரதேச செயலாளர் வீ.ஜெகதீசன் வழங்கிவைப்பதையும், அருகில் கிராம உத்தியோகத்தர் லோகநாதன் மற்றும் சமூக சேவைப் பிரிவினர் நிற்பதையும் படங்களில் காணலாம்.



# சிசலியாவில் பரிசளிப்பு விழா

மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியில் இன்று (13) வியாழக்கிழமை ஆரம்ப பிரிவு மாணவர் களுக்கான பரிசளிப்பு மற்றும் பெற்றோர் தின நிகழ்வு இடம்பெற்ற போது அதிதிகளை மாலை அணிவித்து வரவேற்பதையும், பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண கல்வி திணைக்கள மேலதிக பணிப்பாளர் திரு: எஸ்.மனோகரன் .....

13



# அழகியற்கற்கைகள் நிலையத்தின் பின் வீதியின் நிலை

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட நாவற்குடா சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பின் வீதியானது மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது.வீதியானது பாரிய பள்ளங்களுடன் நீர் நிறைந்துள்ளமையினால் இப் பகுதிவாழ் மக்கள் நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிப்பதாகவும், இக்குடியேற்ற வாசிகள் பிரதான வீதியயடைவதற்கு இவ்வீதியே இலகுவில் சென்றடைவதற்கான வழிஎனவும், மிக விரைவில் இவ்வீதியினை புனரமைத்துத்தருமாறு உரிய அதிகாரிகளை கேட்டு நிற்கின்றனர்.

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)









# பழைய மாணவர் உதவி

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் அனுசரணை யுடன் இடம்பெற்ற வசதி குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வித்தியாலயத்தின் அதிபர் திருமதி வீ.வேலாயுதம் பிள்ளை அம்மணி அவர்கள் மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதினையும், பழைய மாணவர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)



# மலைமுரசின் அறிமுகம்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் மலைமுரசு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திரு.வீ.ஜெகதீசனிடமும், ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் திரு. இரத்தினவேல் அவர்களிடமும் முதற்பிரதிகள் மலைமுரசின் செய்தியாளர் உதயகாந் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org